நாவாந்துறைப் படிப்பகம்


# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 10 சனிக்கிழமை (26-08-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:204


## தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் அடுத்த வாரம் யாழ்.வருகின்றனர்

### நியமனப்பத்திரம் தாக்கல் திங்களன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம்,ஓக.26

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்யும் பணி நாளை மறுதினம் ஆரம்பமாவதை அடுத்து தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் அடுத்தவாரம் யாழ்ப்பாணத்துக்குப் படை எடுக்கவிருக்கின்றனர்.

தமிழர் விடுதலைக்கூட்டணிப் பிரமுகர்களான வீ.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, என்.ரவிராஜ் ஆகியோர் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.

தமது வேட்பாளர் பட்டியல் தயாராகியுள்ளது என்றும் -

யாழ்ப்பாணத்திலுள்ள பிரமுகர்களுடன் கலந்தாலோசித்து அடுத்த வாரம் பட்டியல் வெளியிடப்படும் என்றும் -

கூட்டணிப் பிரமுகர் ஒரு வர் தெரிவித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ முதல்வர் என்.ஸ்ரீகாந்தா, தமிழ் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி, ஈ.பி. ஆர்.எல்.எவ்.(வரதர் அணி) தலைவர் அ.வரதராஜப் பெருமாள் ஆகியோரும் அடுத்த வாரம் இங்கு வரவிருக்கின்றனர்.

(இ-3)

## சிப்பாய் உட்பட மூவர் கிரனேட்டுக்குப் பலி!

### காத்தான்குடியில் நேற்றுச் சம்பவம்

மட்டக்களப்பு,ஓக.26

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடியில் காங்கேயன்ஓடை என்னும் இடத்தில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற கிரனேட் வெடிப்புச் சம்பவத்தில் ஒரு சிப்பாய் உட்பட மூவர் கொல்லப்பட்டனர்; ஆறு பேர் காயமடைந்தனர்.

கொல்லப்பட்டவர்களில் மற்றைய இருவரும் காயம் அடைந்தவர்கள் அறுவரும் முஸ்லிம் பொதுமக்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வவுணதீவு இராணுவ முகாமைச் சேர்ந்த நவ்பர் (வயது 22) என்பவரே உயிரிழந்த சிப்பாய் ஆவார்.

வவுணதீவு இராணுவ முகாமில் இருந்து விடுமுறையில் சைக்கிளில் சொந்த ஊருக்குச் சென்றுகொண்டிருந்த சமயம் அவரது சைக்கிள் பொது மக்களுடன் மோதி இவர் விழுந்தபோது இவரிடம் இருந்த கிரனைட் வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-21)

# தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே மிக அவசியம்;

# புலிகள் ராணுவத் தீர்வை நாடுவதால் நாமும் தயார்

## இராணுவத் தளபதியாகப் பதவியேற்ற லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல சொல்கிறார்

கொழும்பு,ஓகஸ்ட் 26

**தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்று தேவை. அதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவத் தீர்வையே நாடுவதால் இராணுவம் என்ற வகையில் நாமும் அதற்குத் தயாராகவே இருக்கின்றோம்.**

**இலங்கை இராணுவத்தின் புதிய தளபதியாக நேற்றுப் பதவியேற்ற லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

இராணுவத்தின் பதினாறாவது தளபதியாக நேற்று முற்பகல் 10.36 மணிக்கு - சுபநேரத்தில் - லெப். ஜெனரல் லயனல் பலகல்ல பதவியேற்றார்.

வழமையான சம்பிரதாயங்களுடன் அவரது பதவியேற்பு வைபவம் இடம்பெற்றது.

அந்த வைபவத்தில் மேஜர் ஜெனரல்களான ஜானக பெரேரா, நீல் டிடயஸ், நிஹால் மாரம்பே, லொஹான் குணவர்த்தன உட்பட மற்றும் உயர் இராணுவ அதிகாரிகள் பங்குபற்றினர்.

(9ஆம் பக்கம் பார்க்க)



## 2 கொலைகள் உட்பட 12 வன்முறைகள்

கொழும்பு,ஓக.26

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் நேற்றுவரை இரு கொலைகள் உட்பட 12 வன்முறைச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று சுதந்திர மற்றும் நீதியான தேர்தலுக்கான அமைப்பு அறிவித்துள்ளது.

ஜே.வி.பி. அமைப்பிடம் இருந்தே அதிக எண்ணிக்கையான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் -

ஐ.தே.கவிடம் இருந்து இரு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் - அறிவிக்கப்பட்டது.

(இ-3-186)

## 20 ஆயிரம் இளைஞரைத் திரட்டித் தந்தால்

# விகாரமாதேவி அன்று செய்தது போல் ஜனாதிபதி போர் முனை செல்வாரா?

## மகா சங்கத் தலைவர் கேள்வி

கொழும்பு,ஓக.26

20ஆயிரம் இளைஞர்களைப் படைக்குத் திரட்டிக்கொடுத்தால் விகாரமாதேவி அன்று யுத்தமுனைக்குச் சென்றது போல் ஜனாதிபதியும் போர்முனை செல்வாரா?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தேசிய மகாசங்கத்தின் தலைவர் மாதுலுவாவே சோபித தேரர்.

கொழும்பு நாரஹன்பிட்டி அபயராம விகாரையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் - மாநாட்டில் மாதுலுவாவே சோபித தேரர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

யுத்தத்துக்கு இளைஞர்களை ஒன்று சேர்க்க வேண்டும் என மகா சங்கத்தினருக்கு ஜனாதிபதி விடுத்த சவாலை மகா சங்கத்தினர் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஜனாதிபதி கூறியது போல் அவரது தலைமையின் கீழ் இளைஞர்கள் யுத்தமுனை செல்வதை நாம் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

யுத்தத்துக்கு இன்னும் இருபதாயிரம் இளைஞர்கள் தேவை என்றும்

(2ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் முன்னேற்றத்தைத் தடுத்ததனால் அதற்கான பரிசை நான் எதிர்பார்த்தேன்

### ஜானக பெரேரா ஏமாற்றம் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.26

யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்றும் அபாயமான நிலை காணப்பட்ட சமயம் அங்கு சென்று அவர்களின் முன்னேற்றத்தைத் தடுத்தேன். அதற்கான வெகுமதியாக இராணுவத் தளபதி பதவி கிடைக்கும் என எதிர்பார்த்தேன். ஆனால் அது கிடைக்கவில்லை என்று கவலைதான்.

இப்படிக் கூறினார் இராணுவத் தலைமையக நிர்வாக அதிகாரி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.முன்னணியுடன் இணைந்தும் தனித்தும் இ.தொ.கா. போட்டி

கொழும்பு,ஓக.26

எதிர்வரும் தேர்தலில் இ.தொ.கா. ஆறு மாவட்டங்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்தும், மூன்று மாவட்டங்களில் தனித்தும் போட்டியிட முடிவு செய்துள்ளது.

நுவரெலியா, இரத்தினபுரி, மாத்தளை, கேகாலை, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி

(14ஆம் பக்கம் பார்க்க)

## புளொட்,ஈரோஸ் இணைந்து யாழ்.மாவட்டத்தில் போட்டி

யாழ்.மாவட்டத்தில் புளொட் அமைப்பும், ஈரோஸ் அமைப்பும் இணைந்து ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணிப் பட்டியலில் போட்டியிடவிருக்கின்றன.

புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ஈரோஸ் முக்கியஸ்தர் சுதாகரன் ஆகியோர் இந்த முன்னணிப்பட்டியலில் போட்டியிடவிருக்கின்றனர்.

தமது முன்னணியின் வேட்பாளர் பட்டியல் தயாராகிவிட்டது என்றும்-

நாளை மறுதினம் யாழ்ப்பாணத்தில் தமது உறுப்பினர்களுடன் ஆராய்ந்த பின்னர் வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் -

புளொட் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

(இ-3)

## வவுனியாவில் மாணவன் மர்ம மரணம்

வவுனியா,ஓக.26

வவுனியாவில் பாடசாலை மாணவர் ஒருவர் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

பண்டாரிக்குளம் விபுலானந்த மகாவித்தியாலய மாணவனான சண்முகநாதன் மகாதேவா (வயது 19) என்பவரே இறந்தவராவார்.

படம் பார்த்துவிட்டு இரவு வீட்டுக்குப் படுக்கைக்குச் சென்றவர் அடுத்தநாள் காலை தோணிக்கல் அம்மன் கோயிலில் தூக்கில் தொங்கிய நிலையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார். இவரது மரணம் குறித்து விசாரணை நடைபெறுகிறது.

(இ-164)

## 450 கிராம் பாணின் விலை 10 ரூபாவாக நேற்று நிர்ணயம்!

450கிராம் பாணின் உச்ச விலை 10 ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

யாழ். மேலதிக அரசாங்க அதிபா து.வைத்திலிங்கம் தலைமையில் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. ப.நோ.கூ.சங்கத் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், பிரதேச செயலர்கள், பேக்கரி உரிமையாளர் சங்கப்பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

450கிராம் பாண் உற்பத்தியை

(2ஆம் பக்கம் பார்க்க)

# ENGLISH

SPOKEN AND GRAMMAR

BY:- BRITTO

புதிய பிரிவு

ஆரம்பம் : 30.08.2000 காலை 9 மணி (பழைய நேரம்)
திங்கள், புதன், வெள்ளி

இடம் : கொக்குவில் ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்

(C/12700)


# உடைமைகளை மீட்டுவர மக்களுக்கு விசேட "பாஸ்" நடைமுறை தேவை!

## ரெலோ கோருகின்றது

யாழ்ப்பாணம்,ஓக.26

அண்மைக் கால யுத்த நடவடிக்கைகளால் உடைமைகளைக் கைவிட்டு இடம்பெயர்ந்த மக்கள் தமது பகுதிகளுக்குச் சென்று பொருள்களையும், முக்கிய ஆவணங்களையும் எடுத்து வர விசேட பாஸ் நடைமுறை ஒன்று நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்று ரெலோ அமைப்பு கோரி உள்ளது.

இது தொடர்பாக ரெலோ அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் என்.கே. விந்தன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். குடாநாட்டில் தற்போது தீவிரமடைந்துள்ள யுத்தத்தால் மக்கள் பெரும் அச்சத்தை எதிர்நோக்கிக் கொண்டு இருக்கின்றார்கள். தென்மராட்சியில் அண்மையில் வெடித்த யுத்தத்தால் அனைத்து உடைமைகளையும் இழந்த நிலையில் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறி விட்டனர். நூற்றுக் கணக்கானோர் இறந்தும், பல நூற்றுக் கணக்கானோர் காயமடைந்ததும் தெரிந்ததே. இடம்பெயர்ந்தோரில் ஒரு பகுதியினர் அகதிகளாக வடமராட்சிப் பகுதியிலும், ஒரு தொகையினர் வன்னிப் பகுதிக்கும் சென்றுள்ளனர். தற்சமயம் இப்பகுதியில் போர்மேகம் கடுமையாகச் சூழ்ந் துள்ளதால் மக்களால் மீளக் குடியமர முடியவில்லை. குடிமனைகளிலிருந்து முக்கிய ஆவணங்களைக் கூட சென்று எடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

யாழ். குடாநாட்டின் கரையோரப் பகுதிகளான பாஷையூர், கொழும்புத்துறை மற்றும் அரியாலை போன்ற பகுதிகளிலும் இதே நிலைமையைத் தான் காணமுடிகின்றது.

மாரிகாலம் நெருங்கி வருவதால் கட்டட இடிபாடுகளுக்குள் கிடக்கும் அனைத்து ஆவணங்களும் அழிந்து போகும் அபாயம் தெரிகின்றது. இது விடயமாக பேசுவதற்கு பாதுகாப்புப் படைத் தளபதியை சந்திப்பதற்கு நான் அனுமதி கோரியிருந்தேன். அனுமதி காலதாமதமாகுவதால் கோரிக்கையாக இவற்றை முன் வைக்கின்றேன்.

★ ஒவ்வொரு கிராமசேவை பிரிவிலுமுள்ள குடும்பங்களிலுள்ளவர்களை கட்டம் கட்டமாக அனுமதித்து முக்கிய ஆவணங்களையும், ஏனைய பொருள்களையும் மீட்டுவர விசேட பாஸ் நடைமுறை ஒன்றை ஆரம்பித்து முன்னுரிமை அளிக்கப் படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட பகுதிகளுக்குள் சென்றுவர பொதுமக்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவி கோரினால் அதற்கும் படையினர் அனுமதியளிக்க வேண்டும்.

★ தென்மராட்சியில் அமைந்துள்ள அனைத்து வங்கிகளுக்குள்ளும் பெறுமதிமிக்க ஆவணங்கள் இருப்பதாகவும் சில வங்கிக் கட்டடங்கள் இடிந்துவிட்டதாகவும் வங்கி வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. இவைகளை நேர காலத்துடன் மீட்காவிடில் மக்களுக்கு பாரிய நஷ்டம் ஏற்படும் எனவும் தெரியவருகின்றது. இது விடயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

★ குடாநாட்டில் யுத்தம் தணிந்த கரையோரப் பகுதிகளில் மீனவர்களை மீண்டும் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும்.

★ இராணுவத்தால் வழங்கப்படும் விசேட அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள் திரும்பவும் பெற முடியாத நிலை உள்ளதால் மக்கள் சோதனைச்சாவடிகளில் பெரும் சங்கடத்தை எதிர்நோக்கியுள்ளனர். காவல்துறையினரின் முறைப்பாட்டுப் பிரதி, கிராம அலுவலரின் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் மூலம் திரும்பவும் விசேட அடையாள அட்டை வழங்கப்படல் வேண்டும்.

இவற்றைத் துரித கதியில் நடைமுறைப்படுத்தும்படி படை அதிகாரிகளைக் கோருகின்றேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


PHYSICS CENTRE

பிரத்தியேக வகுப்பு
A/L 2001 & 2002

பௌதிகவியல்

By: P.விஜயகுமாரன் Bsc.(spl)

166, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

குறுக்கு றோட், நீர்வேலி. (77701)

தபால் மூலம் ஆங்கிலம்

தொழில் புரிவோர், மாணவர் அனைவருக்கும் விரைவாகவும் விளக்கமாகவும் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது.

சுயவிலாசமிட்ட நீள உறையுடன் எழுதவும்.

English Div.
79, Shoe Road,
Colombo - 13.
(77685)

A.V.M
போட்டோ
கொடிகாமம்

தற்பொழுது சந்தை வீதி உடுப்பிட்டியில் இயங்குகிறது.
கறுப்பு, வெள்ளை புகைப்படங்கள்
ஒரு மணித்தியாலத்தில் செய்து கொடுக்கப்படும். (777514)

ராஜா
(யாழ்ப்பாணம்)
அப்பாஸ், கௌசல்யா, கார்த்திக், ஹீரா மற்றும் பலர் நடிப்பில்
பூவேலி
காட்சிகள்: 10.30, 2.00 (புதிய நேரம்)
(C/12325)

நாகம்ஸ்
சுன்னாகம்.
அஜித் - ஷாலினி நடிப்பில்
அமர்க்களம்
(றீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (புதிய நேரம்) (77704)


## விகாரமாதேவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியுமானால் மகா சங்கத்தினர் அந்த இளைஞர்களைத் திரட்டித் தாருங்கள் என்றும் ஜனாதிபதி கூறியிருந்தார். கல்பொட ஞானதிஸ்ஸர தேரர் அந்த வேண்டுகோளை ஏற்று இருபதாயிரம் இளைஞர்களை அல்ல ஒரு லட்சம் இளைஞர்களையே திரட்டிப் படையில் சேர்க்க நடவடிக்கை எடுக்கவுள்ளார்.

இம்முறை நடைபெறப்போகும் தேர்தல் சுதந்திரமாக நடைபெற வேண்டும் என்பதே எமது பிரார்த்தனை. எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கச் செல்ல முடியுமா? என்ற அச்சம் இப்போது மக்களிடம் தோன்றியுள்ளது.

அரசாங்கமும், எதிர்க் கட்சியினரும் சண்டை இட்டுக் கொள்ள வேண்டுமானால் காலிமுகத்திடலுக்குப் போய் அதைச் செய்து கொள்ளட்டும். யாழ்ப்பாணத்தில் வீர தீரத்துடன் செயற்பட்டு வந்த ஜானக பெரேரா, நீல்டயஸ் சரத் பொன்சேகா போன்ற உயர் அதிகாரிகளை இந்த அரசாங்கம் இடமாற்றம் செய்துள்ளது. இதன் மூலம் அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது என்று விளங்கவில்லை?

யுத்தத்தால் புலிகளை அழித்தொழிக்க வேண்டும் என புதிய பிரதமர் கூறுகிறார். அவ்வாறானால் யுத்த தளபதிகளை இடமாற்றம் செய்வதேன்? யுத்தத்தில் வெற்றி பெற வேண்டுமானால் யுத்த சபை ஒன்று நிறுவப்பட வேண்டும்.

ஜே.வி.பி. உறுப்பினரைக் கொலை செய்தது யார் என்று அனைவருக்கும் தெரியும். ஆனால் பொலீஸாருக்குத் தெரியாது. புதிய அரசமைப்பை முறியடிப்பதற்கு அனைவரும் தமது வாக்குகளைத் தேர்தலில் பாவிக்க வேண்டும் என அனைவரையும் கேட்டுக் கொள்ளுகின்றேன் - எனக் கூறினார். (ஐ-6)

## 450 கிராம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒக்ரோபர் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்குக் கொண்டு வருவது என்றும் -

இந்தத் திகதியில் இருந்து பாணின் நிறையில் குறைவு ஏற்படுவது கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்டோர் மீதுசட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுவது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

450 கிராம் பாண் உற்பத்தி ஆரம்பிக்கப்படும் தினத்திலிருந்து 350 கிராம் பாண் உற்பத்தி நிறுத்தப்பட வேண்டும் என்று கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

எரிபொருள் விநியோகம் தொடர்பாக இக் கூட்டத்தில் ஆராயப்பட்ட போது தேவைக்கு அதிகமான மண்எண்ணெய் ப.நோ.கூ. சங்கங்களில் கையிருப்பில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1964 - 01 - 20

உதிர்வு 1999 - 09 - 09

திருமதி
**கனகலிங்கம் இரத்தினவதி**

மண்ணுலகைத் தான் பிரிந்தீர் - எம்
மனவுலகைப் பிரியவில்லை!
மண்ணில் வாழும் வரை - எம்
எண்ணத்தில் வாழ்வீர்!

வேம்படி சித்தி விநாயகர் அருளினால் உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*62/8. பிறவுண் றோட்,*
*முதலாம் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (77677)

ஆறாப் பிரிவினால் துயருறும்
கணவன், பிள்ளைகள்.

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



தோற்றம் 26 - 07 - 1982

மறைவு 13 - 07 - 2000

அமரர்
**சோமசுந்தரம் சஞ்ஜீவன்**
(உயர்தர கணிதப்பிரிவு - 2001 மாணவன், யாழ். இந்துக் கல்லூரி)

எமது குடும்பத்தின் தலைமகனாய் உதித்து
வாழ்க்கையில் பிரகாசிப்பாய் என்றெண்ணிய எமக்கு
காலன் வஞ்சித்து விட்டமை சொல்லொணாத்
துயரமன்றோ!

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இன்று (26.08.2000) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (77670)

சோமசுந்தரம் குடும்பம்.

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

அன்புடையீர்

29.07.2000 அன்று சிவபதமடைந்த
**திருமதி மார்க்கண்டு அன்னம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 28.08.2000 திங்கட்கிழமை அச்சுவேலியிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



இங்ஙனம்
குடும்பத்தினர் சார்பில்
**திரு.க.இராசதுரை** (மருமகன்)
(அதிபர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

*'இராமானந்தா'*
*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.* (77702)

# இதய அஞ்சலி



அமரர்
**கார்த்திகேசு மாணிக்கவாசகர்**

மனிதநேயம், மக்கள் சேவை என்பன மூச்செனக் - கோப்பாய்
மண்ணை புகுந்த வீடு ஆக்கி ஆட்சி செய்தனை
இனிமை அன்பு கொண்டு ஊர்க்கு சேவை ஆற்றினை
இன்று எங்கு போயினை? எங்கு போயினை?

*கோப்பாய்.* (C/12691)

*கிராம அலுவலர்கள்,*
J/259, J/260, J/261.

### காஷ்மீர் எல்லையில் சண்டை

# பாகிஸ்தானின் பெரும் தாக்குதலை முறியடித்ததாக இந்தியா அறிவிப்பு!

ஸ்ரீநகர்,ஒகஸ்ட்26

**காஷ்மீர் எல்லையில் பூஞ் என்னும் பகுதியில் நேற்று முன்தினம் பாகிஸ்தான் படைகள் நடத்திய பெரும் தாக்குதல் ஒன்றை இந்தியத் துருப்புகள் முறியடித்து விட்டதாக புதுடில்லி அறிவித்துள்ளது. இது தொடர்பாக இஸ்லாமாபாத் தரப்பில் இருந்து அறிவிப்பு எதுவும் உடனடியாக வெளியாகவில்லை.**

நேற்று முன்தினம் அதிகாலை நவீன ரக ஆயுதங்களுடன் இந்திய எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டிய 40க்கும் மேற்பட்ட பாகிஸ்தான் இராணுவத்தினர் பூஞ் பகுதியில் பெருமெடுப்பிலான தாக்குதல் ஒன்றை ஆரம்பித்து டோடா கிராமத்தில் உள்ள இராணுவ முகாமைத் தாக்கி அழித்தனர். இதனைத் தொடர்ந்து இந்திய இராணுவத்தினர் பதில் தாக்குதல் மேற்கொண்டனர். அதனால் அங்கு மோதல் மூண்டது. பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது பன்னிரண்டு பாகிஸ்தானியப் படையினர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர் எனவும் -

இறந்துபோன தமது சாகக்களில் பத்துப் பேரின் சடலங்களை அவர்கள் எடுத்துச் சென்றுள்ளதாகவும் ஏனைய இருவரது சடலங்கள் சம்பவம் இடம்பெற்ற இடத்திலேயே கிடப்பதாகவும் -

இந்தியத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானியர் பல நவீன ஆயதங்களைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து பாகிஸ்தான் தரப்பில் இருந்து எதுவித தகவலும் உடனடியாகத் தெரிவிக்கப்படவில்லை.

இந்த மாதத்தில் பாகிஸ்தான் மேற்கொண்ட இரண்டாவது பெரிய தாக்குதல் இதுவாகும். கடந்த வாரம் நௌசேரா பகுதியில் உள்ள ஓர் இராணுவக் காவலரணை பாகிஸ்தானிய இராணுவம் தாக்கியது குறிப்பிடத்தக்கது. (க)

### நாட்டைவிட்டு வெளியேற உத்தரவு

புதுடில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகப் பணியாளரான மல்லிக் முகமத் றபிக்கை இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேறுமாறு இந்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தான் பிரதித் தூதுவரை வெளியுறவு அமைச்சகத்துக்கு வரவழைத்து இந்த உத்தரவு அவரிடம் வழங்கப்பட்டது.றபிக் தமது பதவிக்குப் பொருந்தாத செயலில் ஈடுபட்டிருந்தார் என்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே இந்த உத்தரவு வழங்கப்பட்டதாக வெறியுறவு அமைச்சக அதிகாரிகள் பிரதித் தூதுவரிடம் தெரிவித்தனர். (க)



இந்தியாவில் தமிழ் மொழி உட்பட 18 மொழிகளை ஆட்சி மொழியாக அறிவிக்கக்கோரி புதுடில்லியில் நாடாளுமன்றக் கட்டடத்துக்கு முன்பாக நடத்தப்பட்ட ஆர்பாட்டத்தின் போது ம.திமு.க. பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி உரையாற்றுகிறார். (ஐ-க)

## சீ.என்.என்னில் பணிபுரியும் பெண்ணை சிரிய ஜனாதிபதி மணம் முடிப்பார்?

லண்டன்,ஒக.26

சிரிய ஜனாதிபதி பஸர் அல்-அஸாத், சீ.என்.என் தொலைக்காட்சி சேவையில் பணிபுரியும் 27 வயதான பெண் ஒருவரை மணம்முடிக்க உள்ளதாக லண்டனில் இருந்து வெளியாகும் அரபுப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

அஸாத் மணம்முடிக்கவுள்ள பெண்ணின் பெயரை அப்பத்திரிகை வெளியிடாத போதிலும் சீ.என்.என்னின் வியாபார நிகழ்ச்சிப் பகுதியின் தலைவரான ஹாலா கொராணியே அவர் எனக் கருதப்படுகின்றது.

கொராணி சிரிய வம்சாவளியைச் சேர்ந்தவர் என்பதுடன் அவரது உறவினரான அஸாத் கொராணி சிரிய நிதி அமைச்சராகப் பதவி வகித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

உலக அரங்கில்



இரத்தப் புற்றுநோயால் மரணமான இந்திய மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலத்தின் உடல் மூவர்ணக் கொடியால் போர்த்தப்பட்டு இறுதி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவதை படத்தில் காணலாம். (ஐ-க)

## அமெரிக்காவில் கட்டுக்கடங்காக் காட்டுத் தீ! அணைக்கும் பணியில் 25 ஆயிரம் பேர் தீவிரம்!!

வாஷிங்ரன்,ஒக.26

அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் மிகப் பெரிய காட்டுத் தீ பரவி வருகிறது. இந்தத் தீயை அணைக்க 25 ஆயிரம் பேர் போராடி வருகின்றனர்.

அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் உள்ள பத்து மாகாணங்களிலும் புளோறிடாவில் 98 இடங்களிலும் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் 81 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் எரிந்து கொண்டிருந்த இந்தக் காட்டுத்தீ தற்போது 5 லட்சத்து 26 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப் பரப்பில் பற்றி எரிகிறது.

தீயை அணைக்க 25 ஆயிரம் தீயணைப்பு வீரர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் 5 ஆயிரம் இராணுவ வீரர்கள் அழைக்கப்படவுள்ளனர். அத்துடன் ஓய்வு பெற்ற தீ அணைப்பு படை வீரர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இங்கு பலத்த காற்று வீசி வருவதனால் தீ புதிய இடங்களுக்கும் வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் கடந்த ஐம்பது வருடங்களில் காணாத மிக மோசமான தீ விபத்து இது என வர்ணிக்கப்படுகின்றது. (க)

### படகு விபத்தில் 50 மாணவர் பலி

நைல் நதியில் பயணம் செய்த படகு ஒன்று மூழ்கியதில் அதில் பயணம் செய்த ஐம்பது மாணவர்கள் நீரில் மூழ்கி இறந்தனர். 17 பேர் உயரிதப்பிக் கரை சேர்ந்தனர்.

10 வயது முதல் 17 வயதுக்குட்பட்ட மாணவர்களே உயிரிழந்தவர்களாவர்.

உயிரிழந்த மாணவர்களின் உடல்களை மீட்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க)



143 பேருடன் பாரசீக வளைகுடாக் கடலில் விபத்துக்குள்ளான 'கல்ப் எயார்' நிறுவனத்தின் போயிங் விமானத்தை படத்தில் காணலாம். இந்த விபத்தில் பயணிகள் அனைவரும் உயிரிழந்தனர். (க)

## நடிகர் ராஜ்குமார் உட்பட மூவரும் திங்களன்று விடுவிக்கப்படலாம்?

கன்னட நடிகர் ராஜ்குமாரை விடுவிப்பது குறித்து சந்தன மரக் கடத்தல் வீரப்பனுடன் பேச்சு நடத்த 'நக்கீரன்' கோபால் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை மீண்டும் காட்டுக்குச் செல்லவுள்ளார்.

பெரும்பாலும் அன்றைய தினம் ராஜ்குமார் விடுதலை செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுவதாக தமிழக முதல்வர் மு.கருணாநிதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கர்நாடக முதலைமைச்சர் மற்றும் தமிழக முதலமைச்சர் தலைமையில் நேற்று சென்னையில் நடைபெற்ற பேச்சுக்களின் விவரங்களுடன் கோபால் வீரப்பனைச் சந்திக்கச் செல்லவுள்ளார்.

51 தடா கைதிகளை விடுதலை செய்வது குறித்த இறுதிமுடிவு எதிர்வரும் திங்கட்கிழமை வெளியிடப்படவுள்ளது. பெரும்பாலும் இவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மனித உரிமைகள் கமிஷனின் பரிந்துரையின் படி காவிரி நீர் திட்டத்தின் அபிவிருத்திக்கு தமிழக அரசும் கர்நாடக அரசும் தலா 5 கோடி ரூபாவை வழங்கவுள்ளன.

வீரப்பன் குறிப்பிட்ட - தமிழக சிறையில் உள்ள - 5தமிழ்த் தீவிரவாதிகளையும் விடுதலை செய்ய மத்திய அரசு இணங்கியுள்ளது. -

இந்நிலையில் நடிகர் ராஜ்குமாரும் ஏனைய மூவரும் விடுதலை செய்யப்படுவது பெரும்பாலும் உறுதியாக வருவதாக தமிழக முதலமைச்சர் கருணாநிதி நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை -

ராஜ்குமாரின் விடுதலை குறித்து கர்நாடக முதலமைச்சர் செய்தியாளர்களிடம் பேசுகையில் "ராஜ்குமாரின் விடுதலை பற்றி கடவுளுக்குத் தான் தெரியும்" என்று கூறினார். அத்துடன் வீரப்பன் மேலதிகமாக நிபந்தனை ஏதும் விதித்தாரா என்பது குறித்து தகவல் எதனையும் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார்.

## வளகுடா விமான விபத்து: பலியானோரின் சடலங்கள் மீட்பு; இனங்காண உறவினர்கள் பயணம்

கெய்ரோ,ஒக.26

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற 'எயார் பஸ்' ஏ-320 ரக விமான விபத்தில் உயிரிழந்த பயணிகளின் உடல்கள் மீட்கப்பட்டுவிட்டன. அவர்களின் உறவினர்கள் எகிப்தில் இருந்து பஹ்ரெயினுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இறந்தவர்களின் சடலங்களை அடையாளம் காண்பதற்காக இவர்கள் விமானம் மூலம் பஹ்ரெயினுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அதிர்ச்சி மற்றும் சோகம் ததும்பிய முகத்துடன் காணப்படும் இவர்களுக்கு மன அமைதியை ஏற்படுத்தும் மருந்துகளை வைத்தியர்கள் வழங்கினர்.

விபத்தில் உயிரிழந்தவர்களில் அநேகமானோா அரேபியர்கள ஆவர்.

இதேவேளை -

இந்த விமான விபத்துக் குறித்த விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. எனினும் விபத்துக்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

விமானம் இரண்டு முறை விமான நிலையத்தை வட்டமிட்டுத் தரையிறங்க முற்பட்டதாகவும் -

மூன்றாம்முறை தரையிறங்க முயன்ற போதே விமானம் கடலில் வீழ்ந்ததாகவும் -

பஹ்ரெயின் விமானக் கட்டுபாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானம் தரை இறங்குவதற்கு சிறிது நேரத்துக்கு முன்பாக விமானத்தின் எஞ்சினில் தீ பற்றிக் கொண்டதாலேயே விபத்து நேர்ந்ததாக அங்குள்ள அரச தகவல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

## இந்தோனேசியக் கப்பல் 66 பயணிகளுடன் மறைவு!

ஜஹார்த்தா,ஒக.26

இந்தோனேசிய பயணிகள் கப்பல் ஒன்று 66பயணிகளுடன் காணாமல் போயுள்ளது.

இந்தோனேசியாவின் வடக்கு ஹல்மகேரா தீவுகளில் இருந்து சுலவேசி என்ற இடத்தை நோக்கி 60 பயணிகள் மற்றும் இந்தோனேசியப் பொலீஸ் அதிகாரிகள் 6பேர் பயணம் செய்த கப்பலே மலுக்காத் தீவுகளுக்கு அப்பால் திடீரென காணாமல் போயுள்ளது.

இதில் கப்பல் பணியாள்கள் எத்தனை பேர் இருந்தனர் என்பது தெரியவில்லை.

கப்பலில் வானொலித் தொலைத் தொடர்பு சாதனம் இல்லாததால் அது எங்கு உள்ளது என்பதைக் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருப்பதாகவும் -

இந்தக் கப்பலில் பொலீஸ் உறுப்பினர்கள் ஏன் சென்றார்கள் என்பது தெரியவில்லை என்றும் -

மலுக்காத்தீவுப் பொலீஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். (க)

### வெடி விபத்தில் 14 பேர் பலி

பீஜிங்,ஒக.26

சீனாவில் ஜியாங்ஷி பிரதேசத்தில் உள்ள இரும்புத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 14 தொழிலாளிகள் பரிதாபகரமாக உயிரிழந்தனர்; 18 பேர் காயமடைந்தனர்.

கடந்த திங்கள் நள்ளிரவிவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (க)

### தாயின் ஈரலை சுவைத்த தனயன்

மொஸ்கோ,ஒக்.26

தாயைக் கொலை செய்து அவரது ஈரலை சமைத்து உண்ட மகனை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் ரஷ்யாவில் இடம்பெற்றது.

55வயதான மகன் தனது வயதுமுதிர்ந்த தாயின் தலையை வெட்டிக் கொன்றதாகவும் பின்னர் அவரது ஈரலை வெட்டிக் கறி சமைத்து உண்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவர் ஏற்கனவே தனது சகோதரியை கொலை செய்தமைக்காக நன்னடத்தை இல்லத்தில் சேர்க்கப்பட்டிருந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க)

## கி.திமோர் அகதிகளுக்கு உதவும் ஐ.நா.ஊழியர்களுக்கு மிரட்டல்!

மேற்குத் திமோரில் அகதிகளாக உள்ள ஆயிரக்கணக்கான கிழக்குத் திமோர் மக்கள் மீண்டும் சொந்த இடங்களுக்குத் திரும்புவதை இந்தோனேசிய சார்பு ஆயுதக்குழுக்கள் தடுப்பதாகவும் -

அகதிகளுக்கான புனர்வாழ்வுப் பணிகளைச் செய்துவரும் ஐ.நா. ஊழியர்களுக்கு இந்த ஆயுதக் குழுக்கள் தாக்குதல் மிரட்டல்களை விடுப்பதாகவும் -

மேற்குத் திமோருக்கான ஐ.நா. அதிகாரி கூறினார்.

சுமார் 200 பேர் வரை உள்ள ஆயுதக் குழுவினர் அகதிகளைக் கிட்டத்தட்ட பணயக்கைதிகள் போல் வைத்திருப்பதாகவும் -

சுதந்திரமாக தமது திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்றும் - கூறப்படுகிறது.

இந்தோனேசிய இராணுவத்தின் ஆதரவு, ஆயுதக் குழுக்களுக்கு உண்டென்று தெரிவித்த ஐ.நா. அதிகாரி அதற்கான பல சான்றுகள் கிடைத்திருப்பதாகத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு இந்தோனேசியாவின் ஆளுகையில் இருந்து கிழக்குத் திமோர் விடுதலை பெற்ற சமயம் அங்கு இடம்பெற்ற வன்முறைகளை அடுத்து ஆயிரக்கணக்கானோர் மேற்குத் திமோருக்கு அகதிகளாகச் சென்றிருந்தனர்.

அவர்களுக்கான புனரமைப்புப் பணிகளில் ஐ.நா.ஈடுபட்டு வருகிறது.

# கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் ஆசிரிய கலாசாலை முதலாம் வருட ஆசிரிய மாணவி

செல்வி. லா. மேகலா

அவர்களின் அன்புத் தந்தை

## வண. சூசை லாசரஸ்

(அங்கிலிக்கன் போதகர்)

அவர்களின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா நித்திய இளைப்பாறுதல் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கலாசாலைச் சமூகம்

-கோப்பாய் ஆசிரிய கலாசாலை-

(77700)

# மரண அறிவித்தல்கள்

## பெரியதம்பி சின்னத்தம்பி

புலோலி தெற்கு சாரையடியைச் சேர்ந்த பெரியதம்பி - சின்னத்தம்பி 22-08-2000 ஆம் திகதி டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் கணவரும் சிவலிங்கம் (டென்மார்க்), யோகேஸ்வரி(டென்மார்க்), பரமேஸ்வரி (ஹொலன்ட்), சிவகுமாரி (ஜேர்மனி), நிறைஞ்சலா(ஜேர்மனி), கிருஷ்ணகுமார்(லண்டன்), ராஜேஸ்வரி(புலோலி) ஆகியோரின் தகப்பனாரும் தனலக்சுமி (டென்மார்க்), ஆறுமுகம் (டென்மார்க்), கணேஸ்வரன் (ஹொலன்ட்), யோகநாதன் (ஜேர்மனி), சிவநாதன் (ஜேர்மனி), சுந்தரமூர்த்தி (கல்விவலயம் வடமராட்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, பொன்னையா, ஆழ்வாப்பிள்ளை, வயிரமுத்து, நாகம்மா, வைரவப்பிள்ளை (கண்டி, சந்திரா இரண்டேஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சின்னப்பிள்ளையின் அன்பு மருமகனும், நடராசாவின் சகலனும், பாக்கியத்தின் மைத்துனரும், அற்புதராணி, கணேசராசா ஆகியோரின் பெரிய தகப்பனாரும், சுகன்ஜா, சிந்துஜா, பகீரதன், காண்டீபன், நிஷாந்தினி, லோஜினி, குகேந்திரன், சர்மினி, சத்தியன், விதுஜன், நித்தியபூபதி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை(27-8-2000) ஞாயிற்றுக்கிழமை டென்மார்க்கில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

மனைவி - செல்லம்மா

மகள் - ராஜேஸ்வரி

வீரபத்திரர் கோவிலடி,
சாரையடி,
புலோலி தெற்கு,
புலோலி.

(77673)

## திருமதி சின்னம்மா நவரத்தினம்

(வேலாசி)

தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி சின்னம்மா நவரத்தினம் 24-08-2000 கொழும்பில் இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடேசு, ரத்தினத்தின் அன்புச் சகோதரியும் முருகையாவின் அன்புத் தாயாரும் கமலாதேவியின் அன்பு மாமியாரும் மோகனதாஸின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24-08-2000 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திரு. திருமதி த சற்குணநாதன்

35/8, சிவகுருநாதர் வீதி, பெறாமகள் குடும்பத்தினர்
யாழ்ப்பாணம்.

(சி/12696)

## முருகேசு சுதர்சன் (ராசன்)

நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த முருகேசு சுதர்சன் 21-08-2000 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் முருகேசு - மனோன்மணி தம்பதியினரின் அன்பு மகனும், சாந்தி, சதீஸ் (கொழும்பு), சசிகரன் (ஜேர்மனி), பிறிகரன் (லண்டன்), சுசந்தி (ஜேர்மனி), ஜெயந்தி, துஸ்யந்தி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், துரை, சிவம் (ஜேர்மனி) சந்திரா (கொழும்பு), றோமனா (ஜேர்மனி), வாசுகி ஆகியோரின் மைத்துனரும், திலக்சன், தனுசன், விதுஷன், துளனி ஆகியோரின் அன்பு மாமனும், வெனி, ஜனனி, அஜித், அலெக்சன், அர்ச்சனா, ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் இன்று (26-08-2000) சனி நண்பகல் 12.00 மணிக்கு கீழ்க்காணும் விலாசத்தில் நடைபெறும்.

M. Sathees, 30, Kinros inn Avenue,
Colombo-4. T. P. No: 555747

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தகவல்:

S. துரை

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(77658)

# இன்று கொடுப்பனவு

தென்மராட்சி, ஒக. 26

தென்மராட்சி, பளை, மருதங்கேணி ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள 35 கிராம அலுவலர் பிரிவுகளில் தங்கியுள்ளவர்களில் 850 குடும்பங்களுக்கான உடனடி நிவாரணக் கொடுப்பனவான 2 ஆயிரம் ரூபா பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளையில் இன்று சனிக்கிழமை வழங்கப்படவுள்ளது.

நிவாரணக் கொடுப்பனவுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல்கள் அந்தந்தக் கிராம அலுவலர்களுக்கு பிரதேச செயலக புனர்வாழ்வுப் பிரிவினரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கொடுப்பனவுக்காக பதிவின்போது ஏனைய வங்கிகளின் கணக்கு இலக்கம் வழங்கியவர்களுக்கும் மக்கள் வங்கிக் கிளையிலேயே கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும்—

கொடுப்பனவுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது தேசிய அடையாள அட்டை, வங்கிப்பாஸ் புத்தகம் ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறும்—

பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை பிரதேசத்தில் தங்கியுள்ள பளை, மருதங்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 272 பேருக்கு ஏற்கனவே இக்கொடுப்பனவு அந்தந்த வங்கிகள் ஊடாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

# தேவார இன்னிசை

யாழ்ப்பாணம், ஒக. 26

அகில இலங்கை திருமுறை மன்றம் நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு வருடந்தோறும் தீர்த்தத் திருவிழா அன்று நடத்திவரும் தேவாரப்பண்ணிசைக்குழு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 7-00மணிக்கு ஆலயத் தேரடியில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் ஆரம்பித்து ஆலயத்தை வலம்வரும்.

இந்நிகழ்வில் பல தேவார விற்பன்னர்கள் பங்குபற்றிச் சிறப்பிப்பார்கள்.

(ஐ-30-103)

# பொ. ஐ. முன்னணி உறுப்பினர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஒக. 26

அம்பலாங்கொடை நகரசபையின் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரான தீப்தி சில்வா என்பவர் நேற்று முன்தினம் இரவு ஒன்பது மணியளவில் சைக்கிலில் சென்று கொண்டிருந்த சமயம் மானி முல்ல என்னும் இடத்தில் இனந் தெரியாத நபர்களால் வழி மறிக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

(இ-3)

# பொ. ஐ. முன்னணி, ம: ஐ. முன்னணி இணைந்து போட்டி

கொழும்பு, ஒக. 26

எதிர்வரும் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து மக்கள் ஐக்கிய முன்னணி போட்டியிட விருக்கின்றது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான டி. எம். ஜயரத்தினவும், மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவும் இது தொடர்பான உடன்பாடு ஒன்றில் நேற்றுக் கைச்சாத்திட்டனர்.

(இ-க-3)

# மொடேன் கல்வி நிலையம்

A/L பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்பு ஆரம்பம்

**28 - 08 - 2000 திங்கட்கிழமை**

நேரம்: 2.00 மணி

ஆசிரியர்: திரு. க. சுந்தரராஜன் (ELI)

நெல்லியடி, கரவெட்டி.

(77694)

யாழ். பல்கலைக்கழக வர்த்தகத்துறைத் தலைவர்

## உயர்திரு க. தேவராஜா

அவர்களது பொன் விழாச் சபை அமைப்பதற்கான

# ஆலோசனைக் கூட்ட அழைப்பு

இடம்: யாழ். இணுவில் இந்துக் கல்லூரி

காலம்: நாளை(27-08-2000)ஞாயிற்றுக்கிழமை

நேரம்: காலை 10.00 மணி

விடயம்: பொன் விழா தொடர்பான கலந்துரையாடல்

விழா அமைப்பாளர்:

ஞான. திருக்கேதீஸ்வரன்
(ஆசிரியர், இணுவில்)

(77684)

# கண்ணீர் அஞ்சலி

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராகப் பணி புரிந்து அமரத்துவம் அடைந்த

## அமரர் கா. மாணிக்கவாசகர்

அவர்கட்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

பிரதேச செயலரும்,
பிரதேச செயலக ஊழியர்,
உத்தியோகத்தரும்

பச்சிலைப்பள்ளி,
பளை.

(77691)

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## பொன்னுத்துரை கமலாம்பிகை

திருநெல்வேலி கிழக்கைப்பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பொன்னுத்துரை கமலாம்பிகை 23-08-2000 அன்று சிலாபத்தில் காலமானார்

இவர் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் ஆனந்தியின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான சண்முகம்பிள்ளை தங்கமுத்துவின் மகளும், தம்பு சின்னம்மாவின் மருமகளும் சபாரத்தினத்தின் சகோதரியுமாவார். இவரது இறுதிக்கிரியைகள் சிலாபத்தில் நடைபெற்றன.

தகவல்:

சபாரத்தினம்
குடும்பத்தினர்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

(77686)

## மயிலு கந்தையா

வைரவர் கோயிலடி, பத்தமேனி அச்சுவேலியைச் சேர்ந்த மயிலு கந்தையா அவர்கள் நேற்று (25 - 08 - 2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற மயிலு தம்பதியினரின் அன்பு மகனும், பவளத்தின் அன்புக் கணவரும், கமலாதேவி, தனபாலசிங்கம், புஸ்பராணி, தனலட்சுமி, சிவனடி (பிரான்ஸ்), சிறீஸ்கந்தராஜா (கனடா), மகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அ. சின்னத்துரை, ஜெயமலர், சி. சின்னத்துரை, புலேந்திரன், தயாவதி, சிவரஜினி, காமினி ஆகியோரின் அன்பு மாமனும், சின்னக்குட்டி, கதிராசி, போகம், இலட்சுமி, சின்னத்தம்பி, கணவதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், சசிகரன், ஜெயபாகரன், கிருபாகரன், சுதாகரன், சஜந்தன், சஜீவன், சாருகன், சங்கீதன், சர்மிலன், சர்வமோகன், சதீஸ்குமார், சதீஸ்காந்தன், கீர்த்திகா, ஹரிகரன், சஜானா, சபீனா, சஜிதா, சுபீதா, சோபனா, தர்மினா, தர்சான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26 - 08 - 2000) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக தீத்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

க. தனபாலசிங்கம்
(மகன்)

வைரவர் கோயிலடி,
பத்தமேனி,
அச்சுவேலி.

(77707)

## உதயன்

### தாமதம் நீங்குமா?

யாழ். செயலக விசேட அடையாள அட்டைப்பிரிவில் விசேட அடையாள அட்டை விநியோகம் இடைநிறுத்தப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விசேட அடையாள அட்டைப் பிரிவில் அடையாள அட்டைக்கு பயன்படுத்தப்படும் பொலித்தீன் உறைகள் நான்கு மாதங்களுக்கு முன்னரே முடிவடைந்து விட்டன. இவற்றை எடுத்து வர கொழும்பு சென்ற அதிகாரியும் இன்னும் திரும்பி வரவில்லை. இதனை அடுத்தே விசேட அடையாள அட்டை விநியோகம் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதனால் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்துள்ள இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.குடாநாட்டைப்பொறுத்தவரை 1995ஆம் ஆண்டுக்கு முற்பட்ட ஒரு தசாப்தகாலத்துக்கு மேலாக அடையாள அட்டைகளின் தேவை குறைவாகவே இருந்தது. அப்பொழுது தேசிய அடையாள அட்டை மட்டுமே பாவனையில் இருந்தது.

ஆனால் 1995ஆம் ஆண்டு யாழ். குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த பின்னர் தேசிய அடையாள அட்டைக்கு மேலதிகமாக விசேட அடையாள அட்டையும் அறிமுகம் செய்யப்பட்டது.

தற்பொழுது தேசிய அடையாள அட்டையைவிட விசேட அடையாள அட்டையின் பாவனையே குடாநாட்டில் அதிகமாக இருந்து வருகிறது.

படையினரின் சோதனை நிலையங்களில் காண்பிப்பதற்கு விசேட அடையாள அட்டை போதுமானது. அத்துடன் வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கும் இந்த விசேட அடையாள அட்டை அங்கீகரிக்கப்பட்ட சான்றாகக் கருதப்படுகிறது.

இவ்வாறாக, விசேட அடையாள அட்டைகளின் தேவை அதிகரித்துள்ள இன்றைய சூழ்நிலையில், பொலித்தீன் உறைகளைக் காரணம் காட்டி விசேட அடையாள அட்டைகள் விநியோகத்தை தாமதப்படுத்துவது வரவேற்கக் கூடியது அல்ல.

குடாநாட்டில், இன்றுள்ள போர்ச் சூழலில் சுற்றி வளைப்புக்கள், திடீர் பரிசோதனைகள் எந்த இடத்தில் எப்பொழுது நடைபெறும் என்று சொல்ல முடியாத சூழ்நிலை உண்டு. அருகில் உள்ள கடைக்கு பாண் வாங்கச் செல்ல வேண்டியிருந்தாலும் அடையாள அட்டையின்றி வீட்டை விட்டுப் புறப்பட முடியாது. இதனால் விசேட அடையாள அட்டை விநியோகத்தில் நிலவும் தாமதம் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

விசேட அடையாள அட்டை பெறுவதில் பாடசாலை மாணவர்களும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் என அறிவிக்கப்படுகிறது. ஒரு மாணவன் ஒரு பாடசாலையில் இருந்து மற்றொரு பாடசாலைக்கு இடம் மாறும்போது முன்னைய பாடசாலையில் தனது விசேட அடையாள அட்டையை ஒப்படைத்து விட்டே செல்ல வேண்டும். புதிய பாடசாலையில் புதிதாக விண்ணப்பித்து அடையாள அட்டை பெறுவதற்கிடையில் போக்குவரத்தின் போது பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

முக்கிய தேவையாகிவிட்ட விசேட அடையாள அட்டையை வழங்குவதில் உள்ள தாமதத்தை நீக்குவதன் மூலம் இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் யாழ். செயலக விசேட அடையாள அட்டைப்பிரிவு தீர்வு காண முடியும். தீர்வு காணுமா?

## புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம்:
# யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகத்திடம் அபிவிருத்திப் பணிகள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.26

தெல்லிப்பழை புற்றுநோய்ச் சிகிச்சை நிலைய அபிவிருத்திப் பணிகள் யாழ். அரச அதிபரின் பணிப்புரையின் பேரில் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கட்டடத் திணைக்களத்தினால் இந்தச் சிகிச்சை நிலையக் கட்டடப் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தச் சிகிச்சை நிலையத்தினை மீள இயங்கச் செய்வதற்காக வடக்கு மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையினால் ஒரு கோடியே 15 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தினை மீண்டும் இயங்கச் செய்வதற்காக தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி என்.கனகரத்தினம் ஈடுபட்டு வருகின்றார்.

இந்தச் சிகிச்சை நிலையத்தினை விரைவாக இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஐ-5-9)

# இந்து மத குருமார்களுக்கு அடையாள அட்டை வழங்கல்

யாழ்ப்பாணம்,ஓக.26

இந்துமத குருமார்களுக்கான விசேட அடையாள அட்டை வழங்கும் வைபவம் அடுத்த மாதம் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

விசேட அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்து சர்வதேச இந்து மத குரு பீடத்தில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து விசேட அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சர்வதேச இந்து மத குருபீடம் அறிவித்துள்ளது.

சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடாதிபதி கலாநிதி ஸ்ரீஜயப்பதாசன் சாம்பசிவ சிவாச்சாரியாரின் முயற்சியினால் அரச அங்கீகாரத்துடன் இந்த விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

பிரதம குருமார்கள், உதவி குருமார்கள், அர்ச்சகர்கள், சைவக்குருமார்கள் போன்றவர்களுக்கு இந்த விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

கொழும்பில் இந்து குருமார்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கும் வைபவம் இம்மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

விசேட அடையாள அட்டை பெறுபவர்களுக்கு மாதாந்த வெளியீடான சிவாச்சாரியாரின் 'அருள் ஜோதி' என்னும் ஆன்மீக மலர் அனுப்பிவைக்கப்படும் என்று சர்வதேச இந்துமத குருபீட தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

(ஐ-5)

# சனசமூக அமைப்புக்களை புனரமைக்க நடவடிக்கை

## மாகாண ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஓக.26

யாழ். மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்கள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்களை முழுமையாக இயங்க வைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் கே.சபாபதிப்பிள்ளை தெரிவித்தார்.

செயலிழந்திருக்கின்ற சனசமூக அமைப்புக்களை மீண்டும் இயங்கச் செய்வதில் கவனம் செலுத்தி வருகின்றோம்.

மாகாண சபைக்குப் போதியளவு வருமானம் இல்லாத காரணத்தினால் இந்த அமைப்புக்களைச் செயற்பட வைப்பதற்குத் தேவையான நிதியினைப் பெற்றுக்கொடுக்க முடியாத நிலையில் உள்ளோம்.

இருந்தபோதும் சனசமூக நிலையங்களுக்குரிய நன்கொடைப்பணம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(ஐ-5)

# திறம்படச் செயற்பட்டு எதிரியைத் தோற்கடியுங்கள்!

## ஸ்ரீலால் வீரசூரிய பிரியாவிடை உரை

கொழும்பு,ஓக.26

படையினர் யுத்தத்தைக் கடமையாக ஏற்றுக்கொள்ளவேண்டும். அதைத் தொழிலாகக் கொள்ளக் கூடாது. நாட்டில் அமைதி நிலவவும், யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வரவும் பொறுப்பு வாய்ந்த தங்களின் கடமையைப் பொறுப்புடன் செய்ய வேண்டும்.

ஓய்வு பெற்றுச் செல்லும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை 8.45 மணியளவில் இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற பிரியாவிடை அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டபின் அங்கு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் புதிய இராணுவத் தளபதியாகப் பதவியேற்கும் மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல, மேஜர் ஜெனரல்கள் நீல்டயஸ், ஜானக பெரேரா உட்பட பல சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ஸ்ரீலால் வீரசூரிய அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

எமது நாட்டின் நிரந்தர அமைதி சமாதானத்திலேயே தங்கியிருக்கிறது. இதனால் இந்த யுத்தத்தை விரைவில் முடிவிற்குக் கொண்டுவர வேண்டும். ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாப்பதற்காகவும், இனங்களுக்கிடையே அமைதி, ஐக்கியம், சகிப்புத் தன்மை ஆகியவற்றை நிரந்தரமாக நிலை நிறுத்தவும் பாதுகாப்புப் படையினராகிய இராணுவம் எதிரிகளை வெற்றிகொள்ள யுத்தம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளது.

அதனால் தமது கடமையைப் படையினர் நாட்டிற்குச் சிறப்பாகச் செய்ய வேண்டும். முன்னரைவிட தற்போது இராணுவம் பலம் வாய்ந்த நிலையில் உள்ளது. ஆட்பலம், ஆயுத பலம் ஆகியவையும் தாராளமாகவுள்ளன. எதிரி பயந்தநிலையில் இருக்கிறான். இதன்மூலம் எதிரி விரைவில் அடக்கப்படவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் ஸ்ரீலால் வீரசூரிய இராணுவத்தினர் சார்பில் வெள்ளிவாள் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார்.

(ஐ-6)

### உதயவாக்கு

மனிதனிடமுள்ள வற்றாத ஆசைகள்தான் அவன் வாழ வேண்டும் என வற்புறுத்துகின்றன.

- காந்தி

### நாளை

ஆவணி 11
ஞாயிற்றுக்கிழமை
*திதி:* திரயோதசி
முன் இரவு 9.00 வரை
*நட்சத்திரம்:* பூசம்
முன் இரவு 9.26 வரை.
*பிரதோஷ விரத நாள்*
*சுபநேரம்:* 9.05 - 10.35
*ராகுகாலம்:* 4.35 - 6.05
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)


# மாடுகளுக்கு நோய்த் தடுப்பு மருந்து

மாடுகளுக்குத் தொண்டை அடைப்பான் நோய் பரவும் சாத்தியக்கூறு தென்படுவதால் மாடு வளர்க்கும் பண்ணையாளர்கள் அந்த நோய்க்குரிய தடை ஊசி மருந்தினை மாடுகளுக்குப் போட்டுக் கொள்ளுமாறு கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர். செல்வி செ.தர்மலிங்கம் கேட்டுள்ளார்.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் வசிக்கும் பண்ணையாளர்கள் நீர்வேலியில் இயங்கிவரும் கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனைக்குச் சென்று தடுப்பூசியை மாடுகளுக்குப் போடமுடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ-180)

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்



## துன்பங்களை நீக்கிடுவாய்!

வண்ண மயில்க் குமரா - உந்தன்
வதனத்தை நோக்கியே நிற்கின்றோம்
வீடு இன்றி உணவின்றித் தவித்து - உந்தன்
வீதியிலே துன்பப்படுகின்றோம்.

ஆறுமுகா உன் திருவிழாவில்
ஆடி ஆடி காவடி எடுப்போம் நாம்
எம்மைக் கடைக்கண் பார்த்துத்
துன்பங்களை நீக்கிடுவாய்!

*புராதனி ஏழூர்நாயகம்*
*(ஆண்டு 9 - அளவெட்டி அருணோதயாக் கல்லூரி)*

## மமதையை அடக்க வந்தான்

ஆறிரு தடந்தோள் காட்டி அங்குசன் தம்பி வந்தான்
ஆரணங்கிருவரோடு அபிநயம் காட்டி நின்றான்
மாறிடும் மனங்களின் உள் மமதையை அடக்கவென்றே
நார்புனை மாலையோடு நல்லூரான் காட்சி தந்தான்.

*க.மயூரன்*
*(யாழ். மத்திய கல்லூரி)*

## வழி காட்டமாட்டாயா?

வீதிஉலா வருமெங்கள் வேலவனே பார்த்திருப்பாய்
நாதியிலா மக்கள் நடுத்தெருவில் நிற்பதனை
நீதி இதுவாமோ நெஞ்சிரந்து கேட்கின்றோம்
சோதியிலே பிறந்த உந்தன் தாயநெறி இதுவாமோ?

இல்லம் விட்டோடி இருட்டினிலே வீழ்ந்தடித்து
மெல்ல எழுந்து மீண்டுமொரு நடைபோட்டு
செல்லரித்த வீடொன்றில் சுருண்டு படுத்திருப்பார்
வல்லமுருகா இவர்க்கோர் வழிகாட்ட மாட்டாயா?

*சி.ஆரூரன்*
*(மகாஜனக் கல்லூரி)*

## வினைகளைத் தீராயோ?

கார்த்திகைக் குமரா கந்தா கடம்பா
கதிர்வேலவனே கார்மயில் வாகனா!
பார்த்திருப்போம் உந்தன் விழாப் பொலிவு
பக்தர்கள் நாம் பயபக்தியுடனே!
போர்க்கோலம் கொண்டு பொடி செய்தாய்
பொல்லாத சூரபன்மனை அன்று
தீர்க்காயோ எமது தீராத வினைகளை
திரு உலா வந்து இன்று!

*ஸ்ரீ.குவலயா*
*(தரம் 6 -*
*வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)*

## நாயகா போற்றி, போற்றி!

ஆறெழுத்து மந்திரத்தால் ஆனாய் போற்றி
வீறுகொண்டு வந்தெம்மைக் காப்பாய் போற்றி
ஆறுபடை வீடுகளை உடையாய் போற்றி
ஊறுவினை விக்குஞ்சமர் தீராய் போற்றி

தந்தையாய் தாயுமாகி தரணியே ஆனாய் போற்றி
செந்தினை மாவுந்தேனும் விரும்பியே உண்பாய் போற்றி
சிந்தனை கெட்டஎம்மை திருத்தியே வைப்பாய் போற்றி
நல்லையில் வீற்றிருக்கும் நாயகா போற்றி போற்றி.

*க.கோபிநாத்*
*(ஆண்டு 10 -*
*பரி. யோவான் கல்லூரி)*

## யுத்தத்தை ஓய வைப்பாய்!

நல்லூர் முருகனை அறிந்துகொண்டேன் - அவன்
நல்லருளாலே இதனைப் பாடுகின்றேன்
வல்வினையாய் யுத்தம் எம்மை வாட்டுதே
வந்தருள் செய்து அதனை ஓயவைப்பாய்
எந்தன் உயரத்துக்கு மாலை கோர்த்து
உந்தன் கழுத்தில் வந்து சார்த்திநின்று
உள்ளம் துள்ளிக் குதித்தாடிடுவேன்
ஊரவர் களிப்பெல்லாம் ஒன்று சேர்த்து.

*சாருஜா ரங்கராஜா*
*(தரம் 7 -*
*வேம்படி மகளிர் உயர்தர கல்லூரி)*

# மக்கள் வங்கி

# சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்கு வைப்பாளர்களுக்கென

# வழங்கும் ஈடிணையற்ற

Jaya Sri


ஜய சிறி

## வெ ற் றி த் தி ட் ட ம்

நாளாந்தம், வாராந்தம், இரு வாரங்களுக்கு ஒருமுறை,
மற்றும் மாதாந்தம் பரிசுக்கு மேல் பரிசு !

தினமும்
10
வர்ணத்
தொலைக்காட்சிகள்

வாராந்தம்
01
புத்தம்புதிய கார்




இருவாரங்களுக்கு
ஒருமுறை
01 வீடு

மாதாந்தம்
04
பேருக்கு தலா 10
இலட்சம் ரூபாய்

நீங்கள் இதுவரை கேட்டிராத அரிய வாய்ப்பு. உங்களுக்குப் பரிசுகளை அள்ளி வழங்கும் ஓர் இணையற்ற திட்டம்... ஜய சிறி வெற்றித்திட்டம். மக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கை அல்லது நடைமுறைக் கணக்கை *வைத்திருப்பவர்களுக்கு பரிசுகளை வழங்கி, அவர்களின் வாழ்வை வளப்படுத்துவதற்காக இந்த அபூர்வ திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பரிசுகளை வெல்வதற்கு, நடப்புக் கணக்காயின் குறைந்த பட்சம் ரூ 5,000/- உம் சேமிப்புக்கணக்காயின் குறைந்தபட்சம் ரூ 10,000/- உம் உங்கள் கணக்கில் மாதாந்த மீதியாக இருக்க வேண்டும்.

மக்கள் வங்கிக் கிளைகள் நாடெங்கும் பரந்துள்ளதால் கணக்கை ஆரம்பிப்பது மிகச் சுலபம். இன்றே, அண்மையிலுள்ள கிளை முகாமையாளரைச் சந்தித்து, ஜய சிறி திட்டத்தில் பரிசுகள் வெல்லும் வழியைக் கேட்டறியுங்கள்.

ஒப்பற்ற வெற்றித் திட்டம் ஜய சிறி

மேலதிக விவரங்களுக்கு இன்றே வங்கி முகாமையாளரைச் சந்தியுங்கள்

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

மக்கள் வங்கி 40 ஆண்டுகள்

* வனிதா வாணா மற்றும் என். ஆர். எப். சி. கணக்குகளுக்கு இத்திட்டம் பொருந்தாது

(C/12550)

# இந்த வார இராசி பலன்

## 26-08-2000 இலிருந்து 01-09-2000 வரை

| | | | |
|---|---|---|---|
| | | வி<br>சனி | ரா<br>சந். |
| | இராசிச்சக்கரம் | | செ |
| | | | சூ<br>புத.<br>வெ |
| கே | | | |

*மாற்றம்: 26-08-2000இல் புநர்பூசம் நட்சத்திரம் - சந்திரன் மிதுன இராசியில் நிற்கும்.*

*27-08-2000இல் கன்னி இராசியில் வெள்ளி மாறும்.*

*01-09-2000இல் கன்னி இராசியில் புதன் மாறும்.*

*அரசியலில் தேர்தல் சூறாவளியும் யுத்தத்தில் திசைமாற்றமும் ஏற்படும். திட்டங்கள் பல தோன்றி மக்களைச் சிந்திக்க வைத்தாலும் மனமாற்றம், இடமாற்றம் மாறாத நிலை எனக்கொள்ள முடியாது. குற்றத்தை மக்கள் நம்பவேண்டும். மக்களைத் திசைதிருப்ப பலரூப, நாமங்களுக்குச் சோதனைகள் வந்துவிடும் காலமாகும். இந்தியாவில், தீவிரவாதிகளின் அழிவுகளும், அரசின் கடும் நடவடிக்கைகளும் இடம்பெறும். மேற்குலகு கிழக்கு உலகுக்கு பல நன்மைகளைச் செய்யும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.*

### மேடம்

மக்களை அழிப்பதில் ரஷ்ய நாட்டுக்கு மட்டுமா வரட்டுக் கௌரவம் இருக்கின்றது என நாம் எண்ணக்கூடாது. தமது குழந்தைகளை எத்தனையோ நாடுகள் வரட்டுக் கௌரவத்தால் அழித்துக்கொண்டிருக்கின்றதை எவரும் மறக்க முடியாது. எந்தப் போராட்டங்கள் வந்தாலும் நீங்கள் தொழில்ஸ்தானத்தில் போராடியபடியே இருப்பீர்கள். பழையன வரவு, சட்ட திட்ட ஒழுங்குகள், பெரியவர்கள், அரச அதிகாரிகள் உதவிகள் கிடைத்தல், எதிர்ப்பாலாரின் அறிமுகங்கள், வீண் செலவுகள் புத்திரர் அல்லது சகோதரங்களுக்காக ஓடி ஓடி உழைப்பீர்கள். வயிற்று வருத்தம், உஷ்ணபீடை, மனக்கலககம் என்பன வரலாம். தொழில்நுட்பத்துறை, பாதுகாப்புத்துறை, போக்குவரத்துத்துறை, செய்தித்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். ஆண்மை, அதிகாரம், புத்திக்கூர்மை மிக்க உங்களால் பலர் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: சனி, ஞாயிறு, புதன், வெள்ளி.*

### இடபம்

எத்தனை பரிசுகளை மக்களுக்குக் கொடுத்துத்தான் என்ன பயன்? கொடிய யுத்தத்தை நிறுத்திச் சமாதானப் பரிசு பெறுபவர்களுக்கு ஈடாகுமா? தொழில்ஸ்தானத்தில் பொறுமையாகச் சமாதானம் பேசி மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுவீர்கள். எதிர்ப்பாலர்கள் நன்மை செய்வார்கள். புதிய திட்டமிட்டு பொருள் தேட முற்படுவீர்கள். வாகன, வீட்டுச் சுகம் கிடைக்கலாம். தொண்டை நோ, நெஞ்சு நோ, சல வருத்தங்கள் என்பன வருத்தலாம். ஓய்வு அடிக்கடி முக்கியமாகும். விவசாயத்துறை, குருத்துறை, எண்ணெய்த்துறை, கமிஷன்துறையினர்கள் போன்றவர்கள் ஆதாயம் அடைவார்கள். இரவு நேரத்தில் இருக்கும் சுறுசுறுப்பு உங்களுக்குப் பகல் நேரத்தில் களைப்பாக மாறுகின்றதோ என எண்ணத் தோன்றுகின்றது.

*அதிர்ஷ்டநாள்: சனி, ஞாயிறு, புதன்.*

### மிதுனம்

ஒருவர் மீது குற்றம் சுமத்துவது நியாயமானதா என எத்தனை பேர் சிந்திக்கின்றார்கள் என எண்ணுகின்றீர்களா? உங்கள் அவசர புத்தியால் ஏன் குடும்பத்தவர்களைப் பகைக்கின்றீர்கள்? தொழில்ஸ்தானத்தில் சில கெட்ட நண்பர்களால் திசை திரும்புகிறீர்களா? பிறர் சொல்வதை அவசரமாக நம்பிவிடாதீர்கள். அரச அதிகாரிகள், அரசியல்வாதிகளின் நட்பு, உதவிகள் கிடைக்க இடமுண்டு. ஆசிரியத்துறை, நீதித்துறை, வியாபாரத்துறை, அச்சுத்துறை போன்றவர்கள் இலாபங்கள் அடைவார்கள். பொருள் தவறலாம் கவனமாக இருங்கள். 'நீங்கள் வாடியிருக்கும் கொக்குப் போல முடிந்ததைப் பெறுவோம்' என இருப்பீர்கள்.

*அதிர்ஷ்டநாள்: சனி, ஞாயிறு, புதன.*

சிட்டுக்குருவி பருந்தைக் கலைக்கலாமா? எனச் சிந்திக்காதீர்கள். பறக்க முடியாத நிலை பருந்துக்கு வந்தால் சிட்டுக்குருவிதானே இராசாவாகும். இதைப்போல உங்கள் சாதுரியத்தால் பல பருந்துகளை தொழில்ஸ்தானத்தில் களைக்கப் பண்ணுவீர்கள். தொழில்ஸ்தானத்தில் திடீர் கதாநாயகன் நீங்கள்தான். குடும்பத்தவர்களுடன் வாக்குவாதம் ஏற்பட இடமுண்டு. எதிர்ப்பாலார் கோபிப்பார்கள். தோல் வருத்தம், வயிற்று நோ, நாரி நோ என்பன வரலாம். விவசாயத்துறை, பாதுகாப்புத்துறை, மின்சாரவேலை அல்லது தொழில்நுட்ப வேலைத்துறைகள் போன்றவற்றில் தொடர்பானவர்கள் இலாபங்கள் அடைவார்கள். எப்படியாயினும் தொழிலில் சாதிக்கவேண்டும் எனத் துடிப்பீர்கள். பாவம், பழி பாராது செயற்பட்டு அகப்பட்டுத் தலைக்குனிவு வரலாம். கவனமாக இருக்கவும்.

*அதிர்ஷ்டநாள்: சனி, ஞாயிறு, புதன்.*

# மகாதேவா ஜோதிடம்

### சிங்கம்

பொறுப்பு உள்ளவர்கள்தான் பொறுமையாக இருக்கவேண்டும். ஏனெனில் காய்த்த மரத்துக்குத்தான் கல்லெறி விழும் என்பதை நாம் மறக்கக்கூடாது. தொழில்ஸ்தானத்தில் பல குறிகளை இலக்குவைத்து சிலர் உங்கள் மீது மறைமுகக் குற்றம் சுமத்தலாம். எதையும்விடாது தொடர்ந்து செயல்படுத்தி வாருங்கள். அதனால் மேலதிகாரிகள் உங்களுக்கு உதவி செய்து தருவார்கள். தெய்வீகம் உதவி செய்யும். உயர் பீடத்தவர்கள் உதவி செய்து கௌரவிப்பார்கள். நாரி நோ, வயிற்றுப் பொருமல், உஷ்ண பீடைகள் என்பன வரும். இயந்திரத்துறை, குருத்துறை, நிர்வாகத்துறை ஆராய்ச்சித்துறை, நகை, மருந்து போன்ற துறையினர்கள் அதிக நன்மை அடைவார்கள். எதனையும் ஊகித்து உடனே அறிந்து விடுவீர்கள். இதனால் உங்களிடம் எவரும் தப்பமுடியாது.

*அதிர்ஷ்ட நாள்: சனி, புதன், வெள்ளி.*

### கன்னி

பொருத்தமற்ற குறிப்புக்களை ஒரு சில சோதிடர்கள் மாற்றிக் கொடுத்துப் பணம் வாங்குவது மகா பாவமானது. சோதிடர்களைப் பார்த்து பலன் சொல்லவும், பொருத்தங்களை நேர்மையாகப் பார்க்கவும் வேண்டும். உண்மையை ஒரு நீதிபதி போன்று நிலைநாட்ட வேண்டியது மிக முக்கியமானதாகும். இதே போன்ற உறுதியுடன் நேர்மையாகத் தொழில்ஸ்தானத்தில் செயல்பட்டு நன்மை அடைவீர்கள். எதிர்ப்பாலார் உதவி பெறுவார்கள். நன்மை சொல்லமாட்டார்கள். மூலச் சூடு, குடல் வருத்தங்கள், தலையிடி, கண் கூச்சம் என்பன வரலாம், இடமாற்றங்கள் சிலருக்கு வரலாம். கேட்டதெல்லாம் கிடைக்குமென்றால் நாம் பல கேள்விகளைப் பிறரிடம் ஏன் கேட்க வேண்டும்? இலாபம் இல்லாத செயல் துன்பத்தைத் தராதா?, செய்தித்துறை, விஞ்ஞானத்துறை, கலைத்துறை, குருத்துறை, வர்த்தகத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும் இலாபங்களும் கிடைக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: சனி, புதன், வெள்ளி.*

### துலாம்

நாம் ஒரு சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் மற்றைய எல்லா சமயங்களையும் கௌரவிக்கப் பழகிக் கொள்ளவேண்டும். மதச் சண்டை, சாதிச் சண்டைகளால் மக்கள் எவ்வளவு அழிவுகளைச் சந்திக்கிறார்கள் என்பது சமநீதி கொண்ட உங்களுக்கு விளங்காதது அல்ல. தொழில் ஸ்தானத்தில் பல கருத்து முரண்பாடுகள் வரத்தான் செய்யும். பொறுமையைக் கடைப்பிடியுங்கள். உறுதியான உங்கள் மதிநுட்பத்தால் கோசாரத்தில் சனி, வியாழன் அட்டமத்தில் இருந்தாலும் உங்களை அசைக்க முடியாது. சோழியன் குடுமி சும்மா ஆடுமா? இலாபமற்ற அலுவல்களை விட்டு விடுங்கள். எமது தொழில் குடும்பம் என்ற வட்டத்தில் நாம் சுழலுவதே, அந்த வாழ்க்கையை நிறைவு செய்வதே தெய்வத் தொண்டாகும். இதனால் நிறைவு வரும். நாரி நோ, நரம்புச் சோர்வு, களைப்பு என்பன வரலாம். விவசாயத்துறை, குருத்துறை, மின்சாரத்துறை, சட்டத்துறை, போன்றவர்களுக்கு இலாபம் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: சனி, திங்கள், புதன், வெள்ளி.*

### விருச்சிகம்

பொறுப்பான பதவி, பிறருக்குச் செய்யும் சேவை உங்களுக்கு மன நிறைவைத் தருகின்றதா? தெய்வத் தொண்டும், ஏழைகளுக்கு உதவுதலும் மனித வாழ்க்கையில் மிக முக்கியமானவையாகும். எமக்காகத்தான் இருட்டும் பகலும் இருக்கின்றது என நாம் சிந்திப்பது போல ஜீவராசிகளும் சிந்திக்கும் என்பது உண்மைதான். பழக்க தோசம் எல்லோரையும் ஒரு வட்டத்துக்குள் விட்டுவிடும் வாழ்க்கைதான் இந்த வாழ்வு. தொழில்ஸ்தானத்தில் கடும் உழைப்பு. எதிர்ப்பாலார் சினப்பர். உரசல் காயங்கள், திடீர் கோபம், வயிற்று வருத்தங்கள் என்பன வரலாம். காரவகை உணவுகளை விலக்குவது நன்று. கடல்த்துறை, வாகனத்துறை, கோயில் வேலை, நகை வேலை, மருந்துத்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி.*

### தனுசு

மண்ணிலே வரும் தோசம்! உங்கள் மனதிலே அடிக்கடி சோகங்களை ஏற்படுத்தும் என்ற உண்மைகளை எத்தனை பேர் அறிவார்கள்? நம்பிக்கை ஒன்றிலேயே வாழ்வீர்கள். துன்பமும் இன்பமும் வாழ்க்கையின் சுழல் சக்கரம். எனவே வருவது வரட்டும் என்ற துணிவுடன் வாழ்வீர்கள். தொழில்ஸ்தானத்தில் உங்கள் மனதைச் சிலர் புரியாமல் உங்கள் மீது வீண்பழி சுமத்துவார்கள். மனதில் பட்டதைச் சட்டெனச் சொல்லிவிடும் வெள்ளை மனம் உங்களுக்கு. சிலர் விளங்காமல் தூசிப்பர். கலங்காதீர்கள். உரசல் காயங்கள், கை கால் விறைப்பு, உஷ்ண பீடைகள், வயிறு நாரி நோக்கள் என்பன வரலாம். செய்தித்துறை, ரீவி, இசைத்துறை, கலைத்துறை, சட்டத்துறை, நிர்வாகத்துறை போன்ற துறையைச் சேர்ந்தவர்கள் இலாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, திங்கள், வெள்ளி.*

### மகரம்

ஓடி ஓடி உழைக்கணும் ஊருக்கெல்லாம் கொடுக்கணும் எனப் பாடியுள்ளார்கள். ஓடி ஓடி உழைத்தாலும் நீங்கள் ஊருக்குக் கொடுப்பீர்களா' என யோசிக்கத்தான் வேண்டும். திட்டமிட்டுக் கஷ்டப்பட்டு உழைத்து ஊருக்கா கொடுப்பது எனக் கேட்காதீர்கள். உங்கள் வீட்டிற்குக் கொடுத்தாலே போதும். தொழில்ஸ்தானத்தில் விளங்கியும், விளங்காமலும் உங்கள் மீது குற்றஞ்சுமத்தப்படலாம். எதனையும் நிதானமாகச் செயற்படுத்துங்கள். எதிர்பாலாருடன் மோதாதீர்கள். குடும்பத்தில் கருத்துவேற்றுமை வர இடமுண்டு. வாகனசுகம், பெரியவர்களின் உதவிகள் என்பன இருக்கும். மூட்டுப்பிடிப்பு, வாய்வுத் தொல்லை, அசதி, வயிற்று நோ என்பன வரலாம். செய்தித்துறை, பிரயாணத்துறை, விவசாயத்துறை, மருந்துத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் பல நன்மைகளை அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, திங்கள், வெள்ளி.*

### கும்பம்

சிலர் விபூதி அனுப்பியாவது வெளிநாட்டுக்காரரிடம் பணம் பறிக்கலாமென கனவு காண்கிறார்கள். இது எவ்வளவு அங்கலாய்ப்புத்தனம் என உங்களுக்குப் புரியும், எனவே கவனமாக இருங்கள். தொழில்ஸ்தானத்திலும் இப்படியான காரியங்கள் மறைமுகத்தில் நடக்கலாம். தொழில் போட்டிகள் ஏற்படும். சமாதானமா? சண்டையா? எனக் கலங்குவீர்கள். போட்டிகள் சர்வ சாதாரணம். வீடு வாகனச் செலவு அல்லது பிரச்சினைதர இடமுண்டு. தோல் வருத்தம், வயிற்றுப் பொருமல், பித்தம் கூடுதல், தலைச்சுற்று வரலாம். நீதித்துறை, எண்ணெய்த்துறை, வியாபாரத்துறை, கோயில் துறை போன்ற துறையினர்களுக்கு நல்ல இலாபங்கள் வர இடமுண்டு.

*அதிர்ஷ்ட நாள்: சனி, ஞாயிறு, திங்கள், வெள்ளி.*

### மீனம்

கலகங்கள் பிறந்து நியாயங்கள் பிறக்கலாம். ஆனால் நம்பிக்கை ஒருவரில், ஒன்றில் ஏற்பட்டால் அதை எவரும் மாற்றமுடியாது. உண்மை, சத்தியம், உறுதிநிலை என்பன நம்பிக்கையின் பிறப்பிடமாகும். தேடியது எல்லாம் ஓடிவரும் என எண்ண முடியாது. தொழில்ஸ்தானத்தில் புதிய திட்டங்கள், உருவாக்கங்கள், தேடிவரும். இனஜன உதவிகள் கிடைக்கும். சிரசு வருத்தம், நரம்புச் சோர்வு, கைகால் உளைவு, பித்த வருத்தங்கள் என்பன கொடுக்கும். கடல்துறை, வியாபாரத்துறை, செய்தித்துறை, போக்குவரத்துத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும், இலாபங்களும் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: சனி, ஞாயிறு, வெள்ளி.*

# சோதிட சஞ்சீவி


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

பூவுலகில் 1928 - 03 - 08



வானுலகில் 2000 - 07 - 27

## திருமதி சின்னத்தம்பி மகேஸ்வரி

அன்பாலும் பண்பாலும் எம்மை அரவணைத்து
வையகத்தில் வாழ்வாங்கு வாழ நல்வழி காட்டிய
எம் அருமைத் தாயே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் – உங்கள்
நினைவு என்றும் எம்மை விட்டு அகலாது!

இன்று (26-08-2000) சனிக்கிழமை நிகழும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*'திலகாபுரி',*
*அல்வாய் வடக்கு,*
*அல்வாய்.*

பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

(77584)

# ஓராண்டு நினைவலைகள்

பிறப்பு 15 – 10 – 1953



இறப்பு 26 – 08 – 1999

## அமரர் நடராஜா திசைவீரசிங்கம்

ஆண்டு ஒன்று புரண்டதுவோ
ஆண்டவன் அடி நீங்கள் சேர்ந்து
ஆசையாக அப்பா என்று அழைக்க
எம் அருகில் நீங்கள் இல்லை
ஆண்டு ஆயிரமானாலும்
அகன்றிடுமோ உங்கள் நினைவு

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி - சத்தியபாமா
மகள் - றஜீனா
உறவினர்கள்.

*"இராஜவீதி"*
*சிறுப்பிட்டி மேற்கு,*
*நீர்வேலி.*

(C/1260!)

# தேசியக் கல்வியியற் கல்லூரிகளும் அவற்றுக்கான அனுமதிகளும்

ஓர் ஆசிரியரது கடமைக்கூறுகளில் முக்கியமானது தனது நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான, அறிவுபூர்வமான திறன் கொண்ட பிரசைகளை உருவாக்குதல் என்பதாகும்.

மேலும் ஆசிரியர்கள் தாம் சார்ந்த சமூகத்தின் ஆக்கபூர்வமான அபிவிருத்திப்பணிகளில் முதுகெலும்பாகவும் அமைகின்றனர்.

இவற்றிற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்கு ஆசிரியர் ஒருவரிடம் உயர் மட்ட, உயர்தொழில் தகைமை எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்காகக் கல்விகற்ற இளைஞர்களைத் தெரிவு செய்து, அவர்களுக்கு ஆசிரியத் தொழில்சார் அறிவினை சேவைக்கு முன்பயிற்சி மூலம் வழங்கி, ஆசிரியத் தொழிலுக்கு வேண்டிய வாண்மை விருத்தியினை வளர்த்து, கற்பித்தல் தொழிலில் ஈடுபட அனுமதித்தல் சிறப்புடையது என அறியப்பட்டது.

இத்தேவையினை நிறைவு செய்வதற்கு வேண்டி இலங்கையில் கல்வியியற் கல்லூரிகள் நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் 1985ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பத்தில் ஐந்து கல்வியியற் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. அவற்றில் நான்கு சிங்களமொழி மூலக் கல்வியியற் கல்லூரிகளாகவும், ஒன்று ஆங்கில மொழி மூலக் கல்வியியற் கல்லூரியாகவும் அமைந்திருந்தன.

கல்வியியற் கல்லூரிகள் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றில் விருத்தியுடனான ஆசிரியர்களை உருவாக்குவனவாகவும், பாடசாலைகளில் உள்ள பௌதிக - மனித வளங்களில் இருந்து உச்ச பயன் பெறக்கூடிய வகையிலும்/ஆசிரியர் கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பெறக்கூடியனவாகவும் திட்டமிடப்பட்டுள்ளன.

அத்துடன் கல்வியியற் கல்லூரிகள் தமது செயற்பாட்டின் மூலம் 'சமூக விருத்தி' என்ற அம்சத்தில் முக்கிய கவனம் கொண்டுள்ளன. பாடசாலையும் சமூகமும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தைப் பிரதான நோக்காகக் கொண்டும் செயற்படுகின்றன.

கல்வியியற் கல்லூரிகளுக்கு பீடாதிபதி (**President**) தலைவராகத் தொழிற்படுகின்றார். தேசிய கல்வியியற் கல்லூரிகள் யாவும் மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டினைக் கொண்டன. கல்விக் கல்லூரிகளுக்குப் பொறுப்பாண்மை வாய்ந்த அதிகாரியாக பிரதம ஆணையாளர் (**Chief Commissioner**) கடமை புரிகின்றார். இவர் 'இசுறுபாய' பத்தரமுல்லையில் அமைந்துள்ள கல்வியமைச்சில் இருந்து பணிபுரிகின்றார்.

கல்விக் கல்லூரிகளினது தேவைகளை பிரதம ஆணையாளர், கல்லூரிப் பீடாதிபதியுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு நிறைவேற்றி வருகின்றார். விரிவுரையாளர் நியமனம், நிதி, மாணவர் அனுமதி போன்றவையும் பீடாதிபதியுடன் தொடர்பு கொண்டு பிரதம ஆணையாளரே நிறைவேற்றுகின்றார். பீடாதிபதிக்கு உதவியாக கல்விசார் கடமைகளைக் கவனிக்க ஓர் உப பீடாதிபதியும் நிர்வாகம், நிதி கடமைகளைக் கவனிக்க ஓர் உப பீடாதிபதியும் பணிபுரிவர். அவர்களின் கீழ் ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு விரிவுரை இணைப்பாளர்கள் கடமையாற்றுவர்.

| இலங்கையின் தேசிய கல்வியியற் கல்லூரிகள் | | | |
|---|---|---|---|
| கல்லூரிகள் | இடம் | மாவட்டம் | ஸ்தாபிதம் |
| 01. மகாவலி தே.க.க. | பொல்கொல்ல | கண்டி | 1985 |
| 02. பஸ்துன்றட்ட தே.க.க. | களுத்துறை | களுத்துறை | 1985 |
| 03. சியனே தே.க.க. | பத்தலகொட | கம்பகா | 1985 |
| 04. சாரிபுத்த தே.க.க. | நித்தம்புவ | கம்பகா | 1986 |
| 05. நில்வள தே.க.க. | அக்குறச | மாத்தறை | 1987 |
| 06. சிறீபாத தே.க.க. | பத்தன | நுவரெலியா | 1992 |
| 07. அட்டாளைச்சேனை தே.க.க. | அட்டாளைச்சேனை | அம்பாறை | 1992 |
| 08. வவுனியா தே.க.க. | பூந்தோட்டம் | வவுனியா | 1993 |
| 09. மட்டக்களப்பு தே.க.க. | மட்டக்களப்பு | மட்டக்களப்பு | 1995 |
| 10. யாழ்ப்பாணம் தே.க.க. | கோப்பாய் | யாழ்ப்பாணம் | 2000 |
| 11. வயம்பா தே.க.க. | பின்கிரிய | குருநாகல் | 2000 |
| 12. றூவான்புர தே.க.க. | இரத்தினபுரி | இரத்தினபுரி | 2000 |
| 13. றுகுண தே.க.க. | அக்மீமன | காலி | 2000 |
| 14. புலத்திசிபுர தே.க.க. | கதுறுவெல | பொலநறுவை | 2000 |

## பயிற்சிக் காலமும் முறைமையும்

கல்வியியற் கல்லூரிகள் 2 வருடங்கள் உள்ளகப் பயிற்சியை நிறுவன ரீதியாகவும் (Institution Alised Training) ஒருவருடம் கட்டுறுப் பயில்வினை(Internship) வெளிவாரியாகவும் பாடசாலைகளிலும் வழங்கி வருகின்றன. பாடசாலையில் கட்டுறு பயில்வு கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஒருவரின் வழிகாட்டலிலும், பாடசாலை அதிபர், சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரின் உதவியுடனும் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு பாடசாலைக்கு கட்டுறுப் பயில்வுக்காக கல்வியியற் கல்லூரி ஆசிரியப் பயிலுநர் ஒருவர் நியமிக்கப்படும்போது அவருக்கான கற்பித்தல் ஏற்பாடுகள், வரவு ஒழுக்கம் ஆகியவை அப்பாடசாலை அதிபரின் முழுப்பொறுப்பில் அமைந்திருக்கும். அதிபரால் அப்பாடசாலையின் வகுப்பு ஒன்று கட்டுறுப்பயில்வு பயிலுநருக்கு கற்பித்தல் ஒழுங்குகளில் உதவியும், ஆலோசனையும் வழங்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கட்டுறுப் பயில்வு ஆசிரிய மாணவர்களை பாடசாலை ஒன்றில் இணைத்தல் அல்லது வகுப்புக்களை ஒதுக்கித்தரல் என்பது அப்பாடசாலையிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காகவோ அல்லது குறிப்பிட்ட அவ்வகுப்பு ஆசிரியர்களுக்கு லீவு வழங்குவதற்காகவோ அல்ல என்பதை மிக முக்கியமாகக் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

கட்டுறுப்பயில்வு மாணவர் ஒருவர் கற்பித்தலில் ஈடுபடும்போது அவரது வகுப்புக்களுக்குப் பொறுப்பான ஆசிரியரும் வகுப்பில் தங்கி அம் மாணவருக்கு உதவியாக இருந்து, கற்பித்தலை அவதானித்து பின்னர் அவர்களுக்கு ஆலோசனை வழங்கி ஆரோக்கியமான முறையில் நெறிப்படுத்தல் பெரிதும் வேண்டப்படுகிறது. ஆரம்பக்கல்வி வகுப்புகளில் இச்செல் நெறி பெரிதும் விரும்பப்படுவதுடன் எல்லா மாவட்டங்களிலும் இவ்வாறான முறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**திருநாவுக்கரசு கமலநாதன்**
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி

இங்கு இன்னுமொரு விடயத்தினையும் ஒரு பக்கத்தில் கொள்ளுதல் வேண்டும். ஓர் ஆசிரியரின் பயிற்சிக்காலத்தில் அவர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவது பொருத்தமுடையதொன்றல்ல என்பது கல்வியியலாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அந்தக் காலம் அல்லது பருவம் ஆலோசனை வழங்குவதற்கும் வழிகாட்டுவதற்குமுரிய காலம் என்பதைக் கல்வி உலகம் நன்கறியும். இந்த முறையைப் பின்பற்ற வேண்டியது அவசியமானதும், ஆரோக்கியமானதுமாகும்.

இன்று இலங்கையில் ஆசிரிய முன் சேவைப் பயிற்சியினை வழங்குவதற்காக 14 கல்வியியற் கல்லூரிகள் செயற்படுகின்றன. 1997ஆம் ஆண்டுக்கு முன்னர் கல்வியியற் கல்லூரிகள் என்ற பெயருடன் செயற்பட்ட இந் நிறுவனங்கள் 1997 ஆம் ஆண்டு கல்விச் சீர்திருத்தத்தைத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

| தேசியக் கல்வியியற் கல்லூரிகளும் பாடநெறிகளும் | |
|---|---|
| கல்வியியற் கல்லூரி | பாடநெறிகள் |
| 1. சியனே தே.க.க. (மொழிமூலம்:- சிங்களம்) | 1. விஞ்ஞானம் 2. கணிதம் 3: தொழில்நுட்பக்கல்வி |
| 2. நில்வள தே.க.க. (மொழிமூலம்:- சிங்களம்) | 1. விஞ்ஞானம் 2. கணிதம் 3. உடற்கல்வி |
| 3. பஸ்டுன்றட்ட தே.க.க. (மொழிமூலம்:- ஆங்கிலம்) | 1. ஆங்கிலம் 2. நூலகமும் தகவல் கல்வியும் |
| 4. மகாவலி தே.க.க. (மொழிமூலம்:- சிங்களம், ஆங்.) | 1. ஆரம்பக்கல்வி 2. ஆங்கிலம் |
| 5. சாரிபுத்த தே.க.க. (மொழிமூலம்:- சிங்களம்) | 1. புத்தசமயம் |
| 6. அட்டாளைச்சேனை தே.க.க. (மொழிமூலம்:- தமிழ்) | 1. ஆரம்பக்கல்வி 2. கணிதம் 3. விஞ்ஞானம் 4. உடற்கல்வி 5. இஸ்லாம் |
| 7. சிறிபாத தே.க.க. (மொழிமூலம்:- தமிழ், சிங்.) | 1. ஆரம்பக்கல்வி (தமிழ், சிங்.) 2. கணிதம் (தமிழ், சிங்களம்) 3. விஞ்ஞானம் (தமிழ், சிங்களம்) 4. சங்கீதம் (தமிழ்) 5. பரதநாட்டியம் (தமிழ்) |
| 8. வவுனியா தே.க.க. (மொழிமூலம்:- தமிழ், சிங்.) | 1. ஆரம்பக்கல்வி (தமிழ், சிங்.) 2. மனைப்பொருளியல் (தமிழ்) 3. இந்துசமயம் 4. விவசாயம் (தமிழ்) 5. உடற்கல்வி (தமிழ்) |
| 9. மட்டக்களப்பு தே.க.க. (மொழிமூலம்: தமிழ்) | 1. ஆரம்பக்கல்வி 2. முதல்மொழி - தமிழ் 3. சமூகக்கல்வி 4. தொழில்நுட்பக்கல்வி 5. நூலகமும் தகவல் கல்வியும் |
| 10. யாழ்ப்பாணம் தே.க.க. (மொழிமூலம்:- தமிழ், ஆங்.) | 1. ஆங்கிலம் 2. ஆரம்பக்கல்வி 3. விஞ்ஞானம் 4. கணிதம் 5. சித்திரம் 6. சங்கீதம் 7. நடனம் |
| 11.- றுகுணு தே.க.க. (மொழிமூலம்:- சிங்களம்,தமிழ்) | 1. ஆரம்பக்கல்வி (சிங்களம்,தமிழ்) 2. கத்தோலிக்கம் 3. சித்திரம் 4. நடனம் 5. சங்கீதம் |
| 12. வயம்பா தே.க.க. (மொழிமூலம்:- சிங்களம்) | 1. முதல்மொழி - சிங்களம் 2. கத்தோலிக்கம் 3. சித்திரம் 4. சங்கீதம் 5. நடனம் |
| 13. றூவான்புர தே.க.க. (மொழிமூலம்:- சிங்களம்) | 1. ஆரம்பக்கல்வி 2. சமூகக்கல்வி |
| 14. புலத்திசிபுர தே.க.க. (மொழிமூலம்:- சிங்களம்) | 1. ஆரம்பக்கல்வி 2. விவசாயம் |

| துறைகள் | க.பொ.த. சா/த பெறுபேறு | க.பொ.த. உ/த பெறுபேறும் பிறவும் |
|---|---|---|
| 1. ஆரம்பக் கல்வி | போதனாமொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி. | தமிழ், சிங்களம் உட்பட ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. |
| 2. விஞ்ஞானம் | போதனாமொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் சித்தி. | பௌதிகவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் அல்லது விவசாயம் ஆகியவற்றில் இரண்டு உட்பட ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. |
| 3. கணிதம் | போதனா மொழியும், கணிதமும் உட்பட ஆறு பாடங்களில் சித்தி. | பௌதிகவியல், இரசாயனவியல், தூய, பிரயோக கணிதம் ஆகியவற்றில் ஏதாவது இரண்டு உட்பட ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. |
| 4. மனைப் பொருளியல் | போதனாமொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் சித்தி. | மனைப் பொருளியல் உட்பட ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. |
| 5. இந்து சமயம் | போதனாமொழி, கணிதம், இந்து சமயம் உட்பட 6 பாடங்களில் சித்தி. | இந்துசமயம், இந்து நாகரிகம், தமிழ், சமஸ்கிருதம் ஆகியவற்றில் ஏதாவது இரண்டு உட்பட ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. |
| 6. இஸ்லாம் | போதனாமொழி, கணிதம், இஸ்லாம் உட்பட 6 பாடங்களில் சித்தி. | இஸ்லாம், இஸ்லாமிய நாகரிகம், அரபிக் ஆகியவற்றில் ஏதாவது இரண்டு உட்பட ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. |
| 7. புத்த சமயம் | போதனாமொழி, கணிதம், புத்த சமயம் உட்பட 6 பாடங்களில் சித்தி அல்லது ஆரம்பப் பிரிவேனா இறுதிப் பரீட்சையில் சித்தி. | புத்த கலாசாரம், பாளி, சமஸ்கிருதம் ஆகியவற்றில் ஏதாவது இரண்டில் சித்தி ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. Or Preliminary Intermediate அல்லது தர்மாசாரிய பரீட்சையில் சித்தி. |
| 8. கிறிஸ்தவம் | போதனாமொழி, கணிதம், கிறிஸ்தவம் ஆகியவற்றில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி. | தேசிய கத்தோலிக்க சபையின் சமய அறிவுக்கான சான்றிதழ் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. அல்லது தியோ லோஜிக்கல் கல்லூரியினது தகுதி வாய்ந்த சான்றிதழ்கள். |
| 9. முதல் மொழி | கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் பாடத்தில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி. | சிங்களம்/தமிழ் திறமைச் சித்தி உட்பட ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. |
| 10. சமூகக்கல்வி | கணிதம், போதனாமொழி, வரலாறும் சமூகக்கல்வியும் உட்பட 6 பாடங்களில் சித்தி. | வரலாறு, அரசியல் விஞ்ஞானம், பொருளியல், வர்த்தகம், புவியியல் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்றில் சித்தி உட்பட ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. |
| 11. விவசாயம் | போதனாமொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி. | விவசாயம் உட்பட ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. |
| 12. தொழில் நுட்பக் கல்வி | தச்சுத்தொழில், மேசன், உலோகவேலை, மோட்டார் பழுது பார்த்தல், ரேடியோ நுட்பம், நெசவு, மட்பாண்டத் தொழில் ஆகியவற்றில் ஒன்று மற்றும் கணிதம், போதனாமொழி ஆகியவை உட்பட 6 பாடங்களில் சித்தி. | ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. |

* ஜி.சீ.ஈ. சாதாரண தரத்திற்குப் பதிலாக குறிப்பிட்ட துறையில் 10 மாதத்திற்குக் குறையாத கற்கை நெறியை அங்கீகாரம் அளிக்கப்பட்ட நிறுவனத்தில் பெறலாம்.

| துறைகள் | க.பொ.த. சா/த பெறுபேறு | க.பொ.த. உ/த பெறுபேறும் பிறவும் |
|---|---|---|
| 13. நூலகமும் தகவல் துறைக் கல்வியும் | போதனாமொழி, கணிதம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி. | ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. |
| 14. சித்திரம் | போதனாமொழி, கணிதம், சித்திரம் உட்பட ஆறுபாடங்களில் சித்தி. | சித்திரம் உட்பட ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. |
| 15. நடனம் (கீழைத்தேச/பரதம்) | போதனாமொழி, கணிதம், நடனம் (கீழைத்தேச/பரதம்) உட்பட 6 பாடங்களில் சித்தி. | நடனம் உட்பட ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. |
| 16. சங்கீதம் (கீழைத்தேச/கர்நாடகம்) | போதனாமொழி, கணிதம், சங்கீதம் உட்பட 6 பாடங்களில் சித்தி. | சங்கீதம் உட்பட ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. |
| 17. ஆங்கிலம் | போதனாமொழி, கணிதம் உட்பட ஆங்கிலம், ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தியுடன் ஆறுபாடங்களில் சித்தி. அல்லது | ஆங்கிலம் உட்பட ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. |
| | ஆங்கிலம், ஆங்கில இலக்கியத்தில் விசேட சித்தி (D) உடன் ஆறுபாடங்களில் சித்தி. | ஒரே அமர்வில் ஏதாவது 3 பாடங்களில் சித்தி. |

* ஆங்கில தகுதிகாண் பரீட்சையில் சித்திபெற வேண்டும்.

| துறைகள் | க.பொ.த. சா/த பெறுபேறு | க.பொ.த. உ/த பெறுபேறும் பிறவும் |
|---|---|---|
| 18. உடற்கல்வி | போதனாமொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி. | ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி. |

* தேசியமட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றமைக்கான சான்றிதழ்கள்.

# ஓய்வுபெற்ற பின்னரும் கூட மக்களுக்குப்பணிபுரிந்தவர்

## மாணிக்கவாசகருக்கு புகழ் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஓக. 26

யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் அமரர் கா. மாணிக்கவாசகர் ஓய்வுபெற்ற பின்னரும் யாழ். மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றியவர்.

மேற்கண்டவாறு யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

உணவு, நிவாரண, எரிபொருள் விநியோகம் தொடர்பான வாராந்தக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கரவெட்டி, கோப்பாய், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் உதவி அரசாங்க அதிபராகவும் கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களில் அரச அதிபராகவும் கடமையாற்றிய அன்னாரின் சேவையினால் பலன் பெற்றவர்கள் மிகப்பலர்.

எத்தகைய உதவி கேட்டுப் போனாலும் செய்து தரக் கூடிய வல்லமை அவரிடம் இருந்தது.

அவர் எவருக்கும் உதவி செய்யும் நல்ல உள்ளம் கொண்டவர். தாராள மனமும் சேவை மனப்பான்மையும் கொண்டவர். அவரது மறைவுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துகின்ற அதே வேளை அன்னாரின் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன் — என்றார்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தலைவர் சி. சிவமகாராசா தனது அஞ்சலி உரையின் போது—

அமரர் மாணிக்கவாசகர் கூட்டுறவுத்துறைக்கும் அதன் வளர்சிக்கும் பெரும் பங்களிப்புச் செய்தவர். அன்னாரின் மறைவுக்கு கூட்டுறவாளர்கள் சார்பில் அஞ்சலி செலுத்துகின்றேன்—என்றார்.

முன்னாள் அரச அதிபர் கா. மாணிக்கவாசகரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. (ஐ-5)

## தமிழர் பிரச்சினைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

படை அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் மத்தியில் உரையாற்றிய பின்னர் புதிய தளபதி ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்று கட்டாயம் தேவை. அரசியல் தீர்வொன்றின் மூலமே அவர்களது பிரச்சினைகளுக்கு முடிவுகாணமுடியும். அது அரசின் கடமையாகும்.

ஆனால் விடுதலைப் புலிகள் இராணுவத் தீர்வையே நாடி நிற்கிறார்கள். இராணுவம் என்ற வகையில் நாமும் அதற்குத் தயாராகவே இருக்கிறோம்.

கடந்தகால போர் நடவடிக்கைகளின்போது புலிகள் தமது மத்திய தரத்தலைவர்கள் பலரை இழந்துவிட்டனர். அந்த இடங்களை நிரப்புவதற்காக ஆள்களைத் திரட்டிப் பயிற்சி அளித்து வருகின்றனர்.

இராணுவத்துக்கு வந்து சேர்ந்துள்ள புதிய ஆயுதங்களின் சுடுதிறனை எதிர்கொள்ள முடியாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. எனினும் இவற்றை எதிர்கொள்ள மாற்றுத்திட்டத்தை அவர்கள் கண்டறியக் கூடும்.

தற்போதுள்ள நிலையில் பெரும் தாக்குதல் ஒன்றை அவர்கள் மேற்கொள்ளும் சாத்தியம் குறைவாகவே உள்ளது.

இராணுவத்துக்கு தற்சமயம் உள்ள பெரும்பிரச்சினை ஆள்பற்றாக்குறையே. படையினருக்கு நவீன ஆயுதங்கள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன — என்றார்.

இராணுவத்துக்கு ஆள் பற்றாக்குறை நிலவுவதால் கட்டாய இராணுவ சேவை அறிமுகப்படுத்துவீர்களா? என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு—

கட்டாய இராணுவசேவைக்கானநோக்கம் எதுவும்இல்லை என்று இராணுவத் தளபதி பதில் அளித்தார்.

இலங்கையை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்வது இராணுவத்தின் பாரிய கடமையாகும். இதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியமாகும்.

இராணுவத்தினரின் மனோதிடத்தை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்ற போதிலும் படையினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு சமூகத்தின் ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது — என்றும் அவர் சொன்னார்.

தொடர்பு சாதனத்துறையில் உள்ளவர்கள் இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டு நல்லுறவைப் பேண வேண்டும் என்றும் லெப். ஜெனரல் பலகல்ல சொன்னார்.

கொழும்பில் புதிய இராணுவத் தளபதி பதவியேற்றதையொட்டி யாழ்ப்பாணத்தில் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலும், சங்கானை முருகமூர்த்தி கோயிலிலும் விசேட பூசைகள் நடத்தப்பட்டன.

ஜெனரல் லயனல் பலகல்ல முன்னர் வடபகுதி இராணுவக் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றியவர் என்பது தெரிந்ததே.

(அ-3-5-10)

## பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஓக. 26

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இன்றும், நாளையும் இடம்பெறவுள்ள பரீட்சைகள் தொடர்பான விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் சாரதி வகுப்பு II 'ஆ' பிரிவுக்கு ஆள் சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை இன்றும் —

நூலகர் சேவை தரம் II, தரம் III ஆகியவற்றுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை மற்றும் தகவல் தொழில்நுட்பப் பட்டப்படிப்புக்கள் கற்கை நெறிக்குத் தெரிவு செய்வதற்கான பரீட்சை ஆகியவை நாளையும் — இடம்பெறவுள்ளன.

(இ-3)

## சமய சந்நிதியில்

குருநகர் புனித ஆரோக்கிய நாதர் ஆலயத்தின் வருடாந்த திருநாள் திருப்பலி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு குருநகர் புனித ஆரோக்கிய நாதர் ஆலயத்தில் யாழ். பேராலய பங்குத் தந்தையினால் ஒப்புக் கொடுக்கப்பட உள்ளது. திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து புனிதரின் திருச்சொருபஆசிரும்இடம் பெறும்.

யாழ்ப்பாணத்தில் தோன்றியுள்ள யுத்த சூழ்நிலை காரணமாக குருநகர் மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்து வேறியங்களில் உள்ளமையால் இம்முறை இந்த ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின் கொடியேற்றவோ, நவநாள் ஆராதனைகளோ இடம் பெறமாட்டாது என ஆலய நிர்வாகம் தெரிவித்தது.

(ஐ—51—17—30)


## விற்பனைக்கு

நல்ல நிலைகளிலுள்ள வீட்டுத்தளபாடங்கள், மின்சார உபகரணங்கள், சமையல் உபகரணங்கள், மற்றும் வீட்டு உபயோகத்துக்காகப் பயன்படும் அனைத்துப் பொருள்களும் உடன் விற்பனைக்கு உண்டு.

உங்கள் தொடர்புகளுக்கு:

87, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(நீராவியடிப் பிள்ளையார் கோயில் அருகாமை)

(77698)

## அறிவித்தல்
## செல்வச் சந்நிதி ஆனந்தசாமி மடம்
### தொண்டமானாறு

செல்வச் சந்நிதி முருகனுக்கு 29-08-2000 ஆண்டு செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்திருவிழா. ஆனந்தசாமி அன்னதான மடத் தலைவர் சி. வல்லிபுரம் அவர்கள் விசேட அறிவித்தல்படி நயினாதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த சோ. சின்னத்துரை அவர்கள் இந்த மடத்துக்கு பொருளாளராக இருக்கிறார். தீவுப்பகுதி மக்களிடமும் யாழ்ப்பாண மக்களிடமும் வன்செயலால் பாதிக்கப்பட்ட மடத்துக்கு பணம் 50 ஆயிரம் ரூபா சேர்த்துத் தந்தார். மேலும் இந்த மடத்துக்கு பணம் தேவையாக இருக்கிறது. அடியார்கள் உதவியை மீண்டும் அன்புடன் வேண்டுகின்றோம்.

பணத்தைச் சேர்த்துத் தந்த அன்பர்கள்:

1. வீ. தங்கராசா [நயினாதீவு]
2. சி. கந்தசாமி [யாழ்ப்பாணம்]
3. சோ. கணநாதன் [நயினாதீவு]

சி. வல்லிபுரம்.
செல்வச்சந்நிதி, தொண்டமனாறு.

(77681)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றி எல்லோரும் பயனுறும் வகையில் இம்மண்ணுக்கும் மக்களுக்கும் நற்பணிகள் பல ஆற்றி இறைபதம் அடைந்த


அமரர்
### கார்த்திகேசு மாணிக்கவாசகர்
(இளைப்பாறிய அரச அதிபர்)

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்துக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வலி. வடக்கு பிரதேச செயலரும்,
சகல உத்தியோகத்தர்களும்.

பிரதேச செயலகம்,
தெல்லிப்பழை. (77705)

## ஆறாத்துயரில் ஆறாத கண்ணீர் நாள் - 31



### அமரர் றோமான் அன்ரனி (இதயன்)
(கிராம சேவையாளர் தரம் - 1, குருநகர்)

எனது ஆருயிர் நண்பா!
காலமெல்லாம் காதலர் போல் நாம் -
களித்திருப்போம் என்றிருந்தேன் - ஆனால்,
காலனவன் உன்னைக் கடுகதியில் அழைத்துச்சென்றான்.
காரணத்தை நீ சொல்லவில்லை? ஆனாலும்
உன் புனித யாகப்பர் சொன்னார்,
அவன் எனது பிள்ளை என்று.

எனது ஆருயிர் நண்பன் இதயனின் இழப்பால் ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், அனைத்து உறவினர்களுக்கும் எனதும், எனது குடும்பத்தினரதும் ஆழ்ந்த, ஆறாத கண்ணீர் அஞ்சலிகள் என்றும்.

செ. பாலச்சந்திரனும்
(கிராமசேவகர் - J/79)
குடும்பத்தினரும்.

இல. 15, யாழ்வீதி,
யாழ்ப்பாணம். (77706)

## SPECIAL ENGLISH

ஆரம்பம்: 01-09-200 o
வெள்ளி பி.ப. 2.00 மணி

ஆசிரியர்

( த. ந. பஞ்சாட்சரம் )

நேரசூசி: செவ்., வியாழன் 10.00 - 12.00 மணி
மேலதிக விவரங்கட்கு:

NEW SCIENCE HALL

கன்னாதிட்டி — யாழ்ப்பாணம். (77699)

## கண்ணீர் அஞ்சலி

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களின் அரசாங்க அதிபராகப் பணிபுரிந்து அன்புடனும், பண்புடனும், அனைவரையும் நேசித்து சிறந்த நிர்வாகப் பணியாளராக விளங்கிய

### அமரர் கார்த்திகேசு மாணிக்கவாசகர்

அவர்களின் மறைவையிட்டு நாம் ஆழ்ந்த துயரம் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா இறைவனடி அடைய இறைவனைப்பிரார்த்திப்பதுடன் அன்னாரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பிரதேச செயலர்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச்சங்கமும்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி. (சி/12694)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

சமையல் செய்து பூந்தோட்டத்தைப் பராமரிப்பதற்கு ஒரு பெண் வேலையாள் தேவை. தங்குமிட வசதியும், சாப்பாட்டு வசதியும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: K. தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (77642)

## மணமகன் தேவை

பட்டதாரி ஆசிரியை, பொது நிறமான, 35 வயது உதயத்துச் செவ்வாய் கிரகபாவம் ஐம்பதுள்ளவருக்கு நற்குணமுள்ள மணமகன் தேவை. விவசாயி உட்பட. முழு விவரம் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விள. இல. 1080 மே/பா உதயன், யாழ்ப்பாணம் (77439)

## மணமக்கள் தேவை

வயது 27 தொடக்கம் 39 வரை டாக்டர், பொறியியலாளர், பட்டதாரிகளுள்ள நான்கு பெண்களுக்கும் ஐந்து ஆண்களுக்கும் மாற்றாகவோ தனியாகவோ மணமக்கள் தேவை. தகுதிக்கேற்ப சீதனம் வழங்கப்படும். முழுவிவரங்கள், ஜாதகங்களும் உள்ளடங்கலாம் தரகர் இன்றி. தொடர்புக்கு:- விள. இல. 1081, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (77440)

## மாந்திரீகர் தேவை

சகல மாந்திரீகங்களும் செய்யக் கூடிய திறமையான மாந்திரீகர் உடன் தேவை. கட்டண விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விள. இல. 1082 மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (77441)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-) தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/12579)

## சனீஸ்வர மாற்றம்

வக்கரிக்கும் சனீஸ்வரன் கொக்கரித்து அளிக்கும் பலாபலன்களையும் வக்கிர நிவர்த்தியாகி எல்லா இராசிகளுக்கும் கொடுக்கும் நன்மை தீமைகளையும் அறிய வேலணை சோதிடர் V.A. சிவராசா வெளியிட்ட சனீஸ்வர மாற்றம் என்று கேட்டு வாங்குங்கள். எங்கும் விற்பனையாகின்றது. (77653)

## நாய் விற்பனைக்கு

ஒரு Bulldog ஆண் நாய் விற்பனைக்கு உண்டு. தொடர்பு K. தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (77641)

## விற்பனைக்கு

யமாஹா D D-6 ரகத்தைச் சேர்ந்த Octo Pad மற்றும் அலுமாரி விற்பனைக்குண்டு. இன்று வந்து பார்வையிடலாம். என். பதம்சீலன், இல. 819/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (முலவைச் சந்திக்கும் கோயில் வீதிச் சந்திக்குமிடையில்) (77692)

நல்ல நிலையிலுள்ள வாடகைக்கு விடக்கூடிய 50 இரும்புக் கதிரைகள் விற்பனைக்கு உண்டு. வாரநாள்களில் பி.ப 3 மணி முதல் பார்வையிடலாம். தொடர்பு: க. சின்னராசா "ஈஸ்வரவாசம்" மயிலணி சுன்னாகம். (77687)

புத்தம் புதிய பஜாஜ் ஸ்கூட்டரும் (7300 கி.மீ ஓடியது) சங்கீத இசைக்கருவிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: T. திருக்குமரன் (வீணாவேணு) வடகம்பரை வீதி, தொல்புரம்,சுழிபுரம். (77664)

## தவறிவிட்டது

மாணிக்கவாசகர் இந்திராணி என்பவருடைய தேசிய அ.அ. (இல. 586912615v), விசேட அ.அ. (இல. 0907021636) என்பன மானிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சங்குவேலி தெற்கு, மானிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (77668)

அருணன் அருள்புதல்வன் என்பவருடைய தே.அ.அ. (இல. 803102317v), விசேட அ.அ. (இல. 09098807), BRIGADE PASS என்பன வல்வெட்டித்துறைக்கும் நெல்லியடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நவிண்டில் சுங்கப்புலம், கரணவாய் வடமேற்கு, கரவெட்டி அல்லது கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். (77667)

39, அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு எனும் முகவரியுடைய ஆறுமுகம் விஜியரத்தினம் என்பவருடைய தே.அ.அ. (இல. 461431500v), விசேட அ. அட்டையும், நிதிமன்ற வீதி, மல்லாகம் எனும் முகவரியுடைய கார்த்திகேசு சரோசினிதேவி என்பவருடைய தே.அ.அ. (இல. 507520367v)யும் கே. கே. எஸ் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் லிங்கம் சில்க் ஹவுஸில் (யாழ்ப்பாணம்) ஒப்படைத்து உதவவும். (77621)

## இறைச்சிக் கோழி

சேவல், கல்பேட் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (77644)

## விண்ணப்பிக்கவும்

கணனியில் தட்டச்சும் றோணியோ வேலையும் தெரிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். இல. 10/2, புகையிரத வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (77682)

## தேசியக் கல்வியியற்..........

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து தேசிய கல்வியியற் கல்லூரிகள் என்று அழைக்கப்படுகின்றன. சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் போதனைகள் நடைபெறுகின்றன. 1985ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை காலம் இயங்கி வந்த ஹப்பிட்டிகம ஆசிரியர் கல்லூரி, ஊவா ஆசிரியர் கல்லூரி ஆகிய இரண்டும், அனுராதபுர ஆசிரியர் கல்லூரியும் இவ்வருடம் முதல் ஆசிரிய கல்வி நிறுவனங்களாக (Teacher Education Institutions) தொழிற்படவுள்ளன.

### கல்விக்கல்லூரிகளும் கற்கை நெறிகளும்

இதுவரை காலமும் இலங்கையின் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம், கணிதம், உடற்கல்வி, மனைப் பொருளியல், ஆங்கிலம் மற்றும் புத்த சமயம் ஆகிய 7 துறைகளில் கற்கை நெறிகள் அமைந்திருந்தன.

இன்று உலகக் கல்விச் செல்நெறியினை உள்வாங்கிக் கொள்ளவும் ஆசிரியர் கல்வியில் தர விருத்தியை ஏற்படுத்திக் கொள்ளவும் நோக்காகக் கொண்டு புதிய கற்கை நெறிகளும் 1997ஆம் ஆண்டு புதிய கல்விச் சீர்திருத்தத்தினூடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அவையாவன நூலகத் தகவல் கற்கைநெறி (Library and Information Studies), தொழில் நுட்பத் திறன்கள் கற்கைநெறி (Technical Skills), அழகியற்கல்வி (Aesthetics), சமூகக்கல்வி(Social Studies), தாய்மொழி (Mother Tongue), விவசாயம் (Agriculture) இந்துசமயம் (Hinduism), இஸ்லாம் (Islam), கிறிஸ்தவம் (Christianity) இப்பாட நெறிகளூடாக வாழ்க்கைத் தேர்ச்சிக் கல்விக்கும் கணனிக் கல்விக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் கல்வியியற் கல்லூரிகளில் செயல்முறைக் கற்றல் கற்பித்தல் முறைமைகளும் தேசிய ஒருமைப்பாட்டுக்கான முறைமைகளும் புதிய கலைத்திட்டத்துடன் எல்லாப் பாட நெறிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

### தேசிய கல்வியியற் கல்லூரிகளில் அனுமதி பெறல்

அரச வர்த்தமானி மூலம் விளம்பரப்படுத்தப்பட்டு ஜி.சீ.ஈ உயர்தர கூட்டுப்புள்ளி அடிப்படையில் விண்ணப்பதாரிகள் கல்வியியற் கல்லூரிகளுக்குத் தெரிவு செய்யப்படுவர்.

பின்வருவன அனுமதிக்கான பொதுவான தகைமைகளாகக் கொள்ளப்படுகின்றன.

1) இலங்கைப் பிரஜையாக இருத்தல்

2) 24 வயதிற்கு மேற்படாதவராயிருத்தல். (இது மாற்றத்துக்குள்ளாகக் கூடியது)

3) திருமணமாகாதவராக இருத்தல்.

4) வேறு தொழில் புரியாதவராக இருத்தல்.

இவை தவிர கற்கைத் துறைகள் அடிப்படையில் விசேட தகுதிகளும் வேண்டப்படுகின்றன. அவற்றோடு ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் பெற்ற கூட்டுப்புள்ளிகளையும் அடிப்படையாகக் கொண்டு தெரிவுகள் இடம்பெறுகின்றன.

# மண்ணெண்ணெய் கடத்தியோர் கைது

கொழும்பு,ஓக.26

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு படகு மூலம் மண்ணெண்ணெய் கடத்திச் சென்ற இருவர் மன்னார் கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டது.

பள்ளிமுனையில் இருந்து விடத்தல்தீவு நோக்கிச் சென்று கொண்டிருந்த படகு ஒன்றை ரோந்து சென்ற கடற்படையினர் வழிமறித்துச் சோதனை செய்த போது மண்ணெண்ணெய் கடத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டதாகவும்-

படகில் இருந்து 100 லீற்றர் மண்ணெண்ணெய் மீட்கப்பட்டதுடன் கடத்தல்காரர் இருவரும் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-9)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 31 - 01 - 1956



உதிர்வு 27 - 07 - 2000

**அமரர் றோமான்அன்ரனி (இதயன்)**

(கிராம சேவையாளர்)

"சீவியத்தில் நேசித்த உங்களை மரணத்திலும் மறவோம்"

**நீர் எமைப்பிரிந்து ஒரு மாதம் ஒழிந்தோடினாலும் எம் இதயத்தின் ஈரங்கள் விட்டகலவில்லை.**

உங்கள் ஆத்மா இறைவன் பாதக்கமலங்களில் சேர்ந்து இன்புற்றிருக்க நாம் இறைவனை இறைஞ்சுகின்றோம்

*குருநகர் சென்ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம்.*

(77659)


THE COLLEGE OF DEGREE STUDIES

பல்கலைக்கழக விரிவுரைகள் (வெளிவாரி)

**கல்வியாண்டு 2000/2001**

*யாழ்., பேராதனை, கிழக்கிலங்கை பல்கலைக்கழகங்களின் பட்டப்பாடநெறிகளான*

* கலை முதற் தேர்வு (G.A.Q)
* வர்த்தக முதற் தேர்வு (First in Com.)
* விஞ்ஞான முதற் தேர்வு (G.S.Q.)

க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அண்மையில் க.பொ.த உயர்தரத்தில் தோற்றியோரும் விண்ணப்பிக்கலாம்.

விவரத்தினையும் விண்ணப்பப்படிவத்தினையும் பெற விரும்புவோர் சுயவிலாசமிடப்பட்டதும் 5ரூபா 50சதம் முத்திரை ஒட்டப்பட்டதுமான தபாலுறையை அனுப்பியும் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

(விண்ணப்ப முடிவுதிகதி 30-09-2000)

விரிவுரைகள் 01-10-2000 இல் ஆரம்பமாகின்றன.

*விவரங்களுக்கு:*

உதவிப்பதிவாளர்,

***பட்டப்படிப்புகள் கல்லூரி***

57/13, ஸ்ரான்லி வீதி,

(இலங்கை வங்கி முன்பாக)

யாழ்ப்பாணம். (7767)



## கூரைத்தகடுகள் & சிமெந்துக்கற்கள்

தரமான கூரைத்தகடுகள், முகட்டுத்தகடுகள், சிமெந்துக்கற்கள் விற்பனைக்கு உண்டு.

தொழிற்சாலை: கியுடெக், 14, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

அலுவலகம்: கியுடெக், சென்.அர்ச்.அன்னம்மா கோயில், மாலிசந்தி.

(77539)



## ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

எதிர்வரும் 30-08-2000 திகதி கொழும்பிற்கு படச்சுருள்கள் அனுப்பி வைக்கப்படும்.

புலோலி தெற்கு, புலோலி. 070-212720

545, பருத்தித்துறை வீதி, நல்லூர். 021 - 2604

(77578)


உ

சிவமயம்

# விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்:

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஆவணித்திங்கள் 11ஆம் நாள் (27-08-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 7.45 மணி முதல் 8.33 மணி வரையுமுள்ள கன்னி லக்கின சுபமுகூர்த்த வேளையில்

கொக்குவில்
பிரம்மஸ்ரீ இரகுநாதையரினதும்
*அவர்கள் சகோதரர்*
பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதி ஐயரினதும்
*பௌத்திரனும்*
*எமது ஜேஷ்ட புத்திரனுமாகிய*
சிரஞ்சீவி
**இரகுநாத ஐயருக்கு**

அளவெட்டி
பிரம்மஸ்ரீ இராமலிங்க ஐயரின்
*பௌத்திரியும்*
*எமது ஜேஷ்ட புத்திரியுமாகிய*
சௌபாக்கியவதி
**ஜெயலட்சுமியை**

கன்னிகாதான பாணிக்கிரகண மாங்கல்ய தாரணம் செய்ய எல்லாம் வல்ல கும்பழாவளை விநாயகப் பெருமான் திருவருளுடனும் பெரியோர்கள் ஆசியுடனும் நிச்சயிக்கப்பட்டு மணமகள் இல்லத்தில் விவாஹம் நடைபெற இருப்பதால் குடும்பசமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

சுபமஸ்து

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

பிரம்மஸ்ரீ இ. சோமசுந்தரேஸ்வரக்குருக்கள்
(சுப்பையாக் குருக்கள்)
சாந்தி மலர் தம்பதிகள்
*கும்பழாவளைப் பிள்ளையார் கோயில், அளவெட்டி.*

(77663)

# நல்லூர் மஹோற்சவம் அமைதியாக நடைபெற சகலரும் ஒத்துழையுங்கள்

## அடியார்களிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக. 26

நல்லூர் ஆலயச் சூழலை அமைதியாகவும் பக்திபூர்வமாகவும் பராமரித்து முருகனின் அருளை அனைவரும் பெறவேண்டும் என்று யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுத் தலைவர் கலாநிதி இ. ஜெய்வேந்திரன் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அப் பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நல்லூர்க் கந்தனின் வருடாந்த உற்சவம் அமைதியாகவும், பக்தி பூர்வமாகவும் நடைபெற்று வருவது மகிழ்ச்சியைத் தருகிறது.

இனிவரும் நாள்களில் பெரும் எண்ணிக்கையிலான முருகன் அடியார்கள் ஆலயத்துக்கு வருகைதந்து தமது நேர்த்திகளை நிறைவு செய்வர் என்று எதிர்பார்க்கின்றோம்.

தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாக்களின் போது பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது ஏற்கனவே நடைபெற்ற திருவிழாக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் நன்கு புலனாகின்றது.

தீர்த்தத் திருவிழாவின் போது கேணிக்குள் முண்டியடித்துக் கொண்டு இறங்கி புனித தீர்த்தத்தினை மாசுபடுத்தாமல் இளைய சந்ததியினர் நடந்து கொள்வார்கள் என நம்புகின்றோம்.

ஆலயத்துக்கு வரும் பக்தர்களின் இறைவழிபாட்டிற்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தாது அவர்கள் பாதுகாப்பாகத் திரும்பிச்செல்வதற்கு தொண்டர்களும் இளம் சந்ததியினரும் உதவி வருவது பாராட்டிற்குரிய செயலாகும்—இப்படி அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ-5-10)


# மனைப்பொருளியல் பயிற்சி நெறி

★ உடை தயாரித்தல் ★ கேக் ஐஸிங்
★ Fondant Icing ★ உணவு தயாரித்தல்
★ பூக்கள் தயாரித்தலும், அலங்கரித்தலும்
★ தலையலங்காரம் ★ மணப்பெண் அலங்காரம்
★ வர்ணந்திட்டல் (Modern Fabric painting & Glass painting) ★ Machine Embroidery
★ Costume Jewellery ★ Patch work

ஆகியவற்றுக்கான புதிய வகுப்புகள் 1 - 9 - 2000 ஆரம்பம்.

VAKEE

உடையார் லேன், கொக்குவில் கிழக்கு.

(77661)


## நாளை நடப்பவை

தென்புலோலி சின்னத்தாய் பிள்ளையார் கோவிலில் பெரியபுராணப் படிப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும்.

இந்தப் புராணப் படிப்பு செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதியுடன் பூர்த்தியடையும்.

(க-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக. 26

கைதாகிக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் முக்கிய கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இராசாவின் தோட்டம் வீதியிலுள்ள அரச சார்பற்ற நிறுவனத்தில் நடைபெறும்.

சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரையும்தவறாது சமுகம் தரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-103)

★ ★ ★

வடமராட்சியில் உள்ள உள்ளூராட்சி மன்ற சபைகளில் பணியாற்றும் வருமான மேற்பார்வையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரவெட்டி பிரதேச சபை நெல்லியடி உப அலுவலகத்தில் நடைபெற உள்ளது. (க-73)

## இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், ஒக. 26

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளம் சந்திக்கு அருகில் உள்ள டி.எம்.ஐ. கல்வி நிலையத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றும் அனைவரையும் இந்தக் கூட்டத்துக்கு சமுகமளிக்குமாறு சங்கம் கேட்டுள்ளது.

(க)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக. 26

ஆசிரிய ஆலோசகர் ந. பார்த்தீபனின் 'மனத்தூறல்' சிறுகதைத் தொகுதி அறிமுக விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வை. செல்வராசா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் அறிமுகவுரையை மேற்படி சங்கத் தலைவரும் ஓய்வுபெற்ற ஆசிரியருமான த. சிதம்பரப்பிள்ளையும், ஆய்வுரையினை ஆசிரியர் க. நடேசுவும் (தெணியான்), ஆசிரியர் குப்பிளான் ஐ. சண்முகமும் நிகழ்த்துவர். (க)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும் றொபேட்டோ பெனிஞ்னியின் 'லைப் இஸ் பியூட்டிபுல்' (Life is Beautiful) என்னும் ஆங்கில உபதலைப்புகளுடனான இத்தாலிய மொழிப் படம் வீடியோக் காட்சியாக இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வமுடையோர் இதனைப் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-10)


# புதிய கிறைண்டிங் மில் ஆரம்பம்

பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் அமைந்துள்ள ஸ்ரீகாந்தா சேவிஸ் ஸ்ரேசன் சிறப்பாக இயங்கி வரும் அதே வளவில் விநாயகர் திருவருளால்

## விநாயகர் அரைக்கும் ஆலை (கிறைண்டிங் மில்)

என்னும் புதிய ஸ்தாபனம் நாளை (27 - 8 - 2000) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு பிரம்மஸ்ரீ ஸ்ரீகாந்தா குருக்கள் ஐயா அவர்களால் திறந்து வைக்கப்படும் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

ந. ஸ்ரீகாந்தா,
ந. நவரத்தினராசா.

பலாலி வீதி, கோண்டாவில் (77688)


# யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

## சகல வர்த்தகர்களுக்குமான அன்பான வேண்டுகோள்

19 - 08 - 2000 அன்று நடைபெற்ற எமது நிர்வாகசபைக்கூட்டத் தீர்மானத்திற்கு அமைய 28 - 08 - 2000 திங்கட்கிழமை நல்லூர் முருகன் தேர்த் திருவிழாவை முன்னிட்டு சகல வர்த்தக நிலையங்களையும் பூட்டி வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக ஸ்தாபனங்களும் சனிக்கிழமைகளில் பிற்பகல் 3.00 மணிக்கும், ஞாயிற்றுக்கிழமைகளிலும், போயா விடுமுறை தினங்களிலும், அரசாங்க வர்த்தக விடுமுறை தினங்களிலும் முழுநாளும் வர்த்தக ஸ்தாபனங்களைப் பூட்டவேண்டுமென்பதனைத் தங்களுக்கு மீண்டும் அறியத் தருகின்றோம். இவ் அறிவித்தல் எமக்கு கிடைத்த அறிவுறுத்தலின் பிரகாரம் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம். இதற்கு அமைய நடக்கத் தவறின் அதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு எமது கழகம் பொறுப்பேற்க மாட்டாது.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

இல. 27, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். (சி/12692)

# 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் நாகேசு சோமசுந்தரம் (சோமு)

தோற்றம் 23-03-1935 மறைவு 29-05-2000

எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
நீ ஏற்றிய ஒளியில்,
நாம் வாழ்க்கையைக் கண்டோம்,
களித்தோம், பூரித்தோம் எம் இதயத்தில்!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (26—08—2000) சனிக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாசமிகு மனைவி (இலட்சுமி),
பிள்ளைகள்.

91/6, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (77625)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி இராசம்மா சின்னத்தம்பி (ராசு)

அன்னையின் மடியில் 1927—07—05 ஆண்டவன் அடியில் 2000—07—27

மாதம் ஒன்று ஆனதம்மா!
மறக்கவில்லை உங்கள் முகம்
திங்கள் ஒன்று சென்று விட்டதம்மா!
தீரவில்லை எம் துயரம்
பெற்ற எம்மைத் தவிக்க விட்டுப்
பிரிந்து நீங்கள் சென்றதேனோ?
மலர்ந்த உங்கள் முகத்தைக் காண
மனம் துடிக்கும் மருமக்கள் கூட
வளர்ந்த பேரப்பிள்ளைகளும்
வருந்தி இங்கு அழுகின்றார்கள்
நெஞ்சை விட்டு நீங்கவில்லை
நிதமும் உங்கள் நினைவலைகள்!

குடும்பத்தினர்

36/4, இராமநாதன் வீதி,
கலட்டி யாழ்ப்பாணம். (77662)

# உதயம் தொலைத் தொடர்பு நிலையம்

★ உள் நாட்டு ★ வெளி நாட்டுத் தொடர்புகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

T. P. இல. 2392

**உதயம்**

172, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(மக்கள் வங்கி அருகில்) (சி/12682)


# கண்ணீர் அஞ்சலி

## காசிநாதன் ஜோதிநாதன்

அவர்களின் மறைவினால் துன்புற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளர்,
சக உத்தியோகத்தர்கள்,
சாமுவேல் சன்ஸ் அன் கோ லிமிட்டெட்
(77671)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 26

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகாசபையின் ஏற்பாட்டில் மேற்கு வீதி முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 5 மணி முதல் 6 மணிவரை கான கதாவாரிதி பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா நிகழ்த்தி வரும் 'மகாபாரதம்' இசைச் சொற்பொழிவுத் தொடரில் இன்று 'வனவாசம்' என்ற தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

(க–30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக 26

வடபிராந்திய இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்று வரும் தெய்வீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று 'இதிகாச முத்துக்கள்' எனும் தலைப்பில் சிவஸ்ரீ காரை. கு. சிவராஜசர்மா உரை நிகழ்த்துவார். (க-30)


# தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ஐஸ்கிறீம் கம்பனிக்கு

**கிறீம்மேக்கர் மற்றும் சயிக்கிள் வியாபாரிகள் தேவை.**

தொடர்பு:

ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பு நிலையம்
கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி,
நீர்வேலி தெற்கு. (77674)


# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக இருந்து மக்களுக்கு அன்புடன் அளப்பரிய சேவையாற்றிய முன்னாள் அரசாங்க அதிபர்

## அமரர் கா. மாணிக்கவாசகர்

அவர்களது மறைவினால் துன்புற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உதவி அரசாங்க அதிபரும், அலுவலர்களும்.**
வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலக
நலன்புரிச் சங்கம், மருதங்கேணி.
(சி/12690)

# விண்ணக வாழ்வின்
# பதினேழாவது ஆண்டு நிறைவு



மலர்வு
04 - 11 - 1936

உதிர்வு
26 - 08 - 1983

## திருமதி தியாகராசா மாணிக்கம்

(சின்னாலடி, காரைநகர்)

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து எமக்காகவே வாழ்ந்து இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு அணைந்த அம்மா! எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு என்றும் அகலாது! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நல்லைக் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று ( 26-08-2000 ) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு துர்க்காதேவி தேவஸ்தான நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் அன்னாரின் நினைவாக நடைபெறும் மதியபோசன விருந்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறுமிகப் பணிவாக வேண்டிக்கொள்கின்றோம்.

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**
இல. 212, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
மில்லேனியம் கோட்ஸ் 5 சீ 1/1, பெரேரா லேன்,
வெள்ளவத்தை.

**ஈஸ்வரன் ரேடர்ஸ்** இல 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**M. L. S. எம். எல். எஸ் ரேடிங்கம்பனி**
**S. T. பரமேஸ்வரன் ரேடிங்கம்பனி**
இல. 180, சென்றல் றோட், கொழும்பு – 12
(சி/12687)

# The Barbara Mulvaney Computer Training Center

**123, Temple Road, Jaffna**

Specially for Girls

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் கடந்த ஆண்டு மகளிருக்கென பிரத்தியேகமாக கணனிப்பயிற்சியை வழங்கிய எமது நிறுவனம் இவ்வாண்டு முதல் மேலும் விரிவடைந்து மிகவும் குறைந்த கட்டணங்களுடன் கணனிப்பயிற்சி நெறிகளையும் புதிய கணனி மயப்படுத்தப்பட்ட செயல்திட்டங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

## ☞ Computer Courses



**Diploma in Microsoft Office (5 Months)**


* Microsoft Word
* Microsoft Excel
* Microsoft Access
* Microsoft PowerPoint
* Windows Operating System

**Diploma in Desktop Publishing (5 Months)**

Publishing Work செய்யக்கூடிய வகையில் Stencil Cutting, Transparency Film, Tracing Sheet பாவனையுடன் கூடிய பல Software இன் ஒன்றிணைந்த பாடத்திட்டம்.

* Adobe PageMaker (Version 6.5)
* Adobe PhotoShop
* Microsoft Publisher
* Microsoft Word
* Microsoft Picture It
* Microsoft Photo Editor
* Microsoft Greetings
* Digital Camera Operation with Software & Scanner

**Photo Graphics Courses (3 Months)**



* Adobe PhotoShop
* Microsoft Picture It
* Microsoft Photo Editor
* Microsoft Greetings
* Digital Camera Operation with special Software

**Certificate Courses**

* Microsoft Word 2000 (3 Months)
* Microsoft Excel 2000 (3 Months)
* Microsoft Access 2000 (3 Months)
* Microsoft PowerPoint 2000 (1 1/2 Months)
* Microsoft Publisher 98 (2 Months)
* Adobe PageMaker 6.5 (3 Months)
* AutoCAD 2000 (3 Months)
* Microsoft Visual Basic 6.0 (4 Months)

• **Diploma in Kids Course (3 Months)**

* Designing and Programming Packages

## ☞ DeskTop Publishing


நவீன பாணியில் இதற்கெனப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட Software இல் Wedding Invitation Cards (புகைப்படங்களுடன்) மற்றும் ஏனைய Invitaion Cards, Greeting Cards, புத்தகங்கள், ஆய்வுக்கட்டுரைகள் என்பன உங்கள் எண்ணப்படி அமைத்துக் கொடுக்கப்படுவதுடன் Computer Type setting, Stencil Cutting, Colour Printing, Lazer Printing என்பனவும் செய்து கொடுக்கப்படும்.

## ☞ Play House

மாணவர்களுக்கான அறிவு பூர்வமான விண்வெளி சம்பந்தமான வியத்தகு விடயங்கள், விஞ்ஞான பாட சம்பந்தமான பயனுள்ள புல Software கள், முப்பரிமாணத் தோற்றத்துடன் கூடிய விளக்கங்கள் (Visually 3 D), இன்னும் பல விளையாட்டுக்கள் அடங்கிய

**Play House Show room** க்கு விரைந்து வாருங்கள், எமது கல்வி நிறுவனத்தில் கல்வி பயிலாத மாணவர்களும் நுழைவாயிற் கட்டணத்தை மாத்திரம் செலுத்தி உங்களின் பொழுது போக்குக்கான நேரத்தைப் பயனுடையதாக்கிக் கொள்ளுங்கள்.

## ☞ Offers



* I.T (Information Technology) Library facilities (Computer Books, Computer Magazine and T.V facilities)
* Demonstration CD's and Cassets
* Enough Computers with Laboratary
* Unlimited Practical Hours.

**மகளிரால் மகளிருக்கென பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட ஒரே ஒரு கல்வி நிறுவனம்**

மேற்படி வகுப்புக்கள் யாவும் 05.09.2000 அன்று ஆரம்பமாக இருப்பதால் 01.09.2000 திற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

(77689)

- நிர்வாகம்

# JAFFNA TECHNICAL INSTITUTE

## JAFFNA, SRILANKA

Regd No. 15251

## COMPUTER COURSES

**DIPLOMA IN SOFTWARE ENGINEERING**

* Basic Computer Concepts
* MS Dos
* MS Windows 98, 2000
* MS Excel 2000
* MS Word 2000
* Programming Techniques
* MS Access
* dBaseIII+
* Visual Basic 6
* Programming Project
* Multimedia
* E-mail & Internet

Course Fee: Rs. 19,250 — Duration : 12 Months

**DIPLOMA IN COMPUTER PROGRAMMING**

* Operating System
* Basic Computer Concepts
* MS Word 2000
* Programming Techniques
* MS Windows 98, 2000
* MS Excel 2000
* dBaseIII+
* Pascal

Course Fee: Rs. 8,250 — Duration : 8 Months

**DIPLOMA IN WINDOWS APPLICATIONS**

* Basic Computer Concepts
* MS Word 2000
* MS Excel 2000
* MS Access 2000
* MS Windows 98, 2000
* Multimedia
* E-mail & Internet
* MS PowerPoint 2000

Course Fee: Rs. 7,500 — Duration : 6 Months

**CHILDRENS PROGRAMMING**

* Introduction
* MS Word 2000
* MS Excel 2000
* Principles of a Computer
* Games & Drawings
* Encycopedia (Encarta 2000)

Course Fee: Rs. 2,500 — Duration : 3 Months

**DIPLOMA IN MICROSOFT OFFICE 2000**

* Basic Computer Concepts
* MS Word 2000
* MS Access 2000
* MS Excel 2000
* MS Windows 98, 2000
* MS OutLook 2000
* MS PowerPoint 2000

Course Fee: Rs. 6,000 — Duration : 6 Months

**CERTIFICATE COURSES**

MS Excel 2000, MS Word 2000, MS Access 2000, MS PowerPoint 2000, dBaseIII+, Pascal, CorelDraw, PageMaker 6.0 and Visual Basic 6

- கூடிய நேர செய்முறைப் பயிற்சி அளிக்கப்படும்.
- கட்டணத்தினை தவணை முறையில் செலுத்தும் வசதி.
- பாடசாலை மாணவருக்கான மாலை நேர வகுப்புக்கள்.
- தொழில் புரிவோருக்கான சனி, ஞாயிறு வகுப்புக்கள்.

J.T.I.

**இப் பிரிவில் சேரும் மாணவர்களுக்கு**

மேற்குறிப்பிட்ட கட்டணத்திலிருந்து 25% கழிவு வழங்கப்படும்.

**புதிய பயிற்சிகள் ஆரம்பம் : (I) 02. 09. 2000 10 a.m**

No.07, Palaly Road,
Jaffna.
(இலுப்பையடிச் சந்தி அருகில்)

- DIRECTOR

(77622)


## சிப்பாய்களுக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு,ஓக.26

மட்டக்களப்பு கலுவாங்கேணிப் பகுதியில் கடந்த18ஆம்திகதி மாணிக கவேல் விஜயதாசனின் மரணத்துக் குக்காரணமாக இருந்ததாகக் கூறப் படும் மூன்று இராணுவத்தினர் நேற்று மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்த மூன்று இராணுவத்தின ரையும் எதிர்வரும் 6ஆம் திகதி மாவட்ட நீதிமன்றில் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்துமாறு உத்தரவிடப்பட்டது. (இ-21)

## பொ.ஐ.முன்னணி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுடன் இணைந்தும் -

கொழும்பு, கண்டி, பதுளை ஆகிய மாவட்டங்களில் தனித்தும் - இ.தொ.கா. போட்டியிடவிருக் கின்றது.

இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் நுவரெ லியா மாவட்டத்தில் பொது மக் கள் ஐக்கிய முன்னணிப் பட்டியலில் போட்டியிடவிருக்கிறார். (இ-3-186)

## புலிகளின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தலைமையகத்தில் நேற்று நடந்த புதிய தளபதி பதவி ஏற்பு வைபவத்தில் கலந்து கொண்ட அவரிடம் செய்தியாளர் விடுத்த கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

'யாழ்ப்பாணத்தில் புலிகளின் முன்னேற்றத்தைத் தடுத்ததன் மூலம் நாட்டுக்குச் சேவை செய் துள்ளேன். சாதாரண மனிதன் என்ற வகையில் அதற்கான பரிசை எதிர்பார்த்ததில் தப்பில்லையே' என்றார் அவர். (இ-3)


நடைபெறுகிறது!

**A/L 2001**

**ஓப்படைக் க/கு**

மாலை 4 மணி
(சனி, ஞாயிறு)

**கணக்கீடு**

**D.SAM**

பிரத்தியேக வகுப்பு

76/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம் (C/12654)



**DCS**

**College of Computer Technology**

(British ACP Recognized Training Centre)

எமது நிறுவனத்தால் நடத் தப்பட்ட 2000 ஆண்டுக்கான புல மைப்பரிசில் பரீட்சையில் சித்தி யெய்தி பதிவுகளை மேற் கொண் டோருக்கான வகுப்புக்கள் (02. 09. 2k) சனிக்கிழமையன்று ஆரம்பமாகும். பதிவுகளை மேற் கொள்ளாதவர்கள் (31. 08. 2k) வியாழக்கிழமைக்கு முன்னதாக பதிவுகளை மேற்கொண்டு ஆரம் பமாகும் புதிய பிரிவுகளில் இணைந்து கொள்ளவும்.

எமது நிறுவன புலமைப் பரி சில் பரீட்சைக்கு தோற்றாமல் தற் போது ஆரம்பமாகும் புதிய பிரிவில் இணைய விரும்புபவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட விருப்பதால் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

Director (Ad)
DCS
N.M.M.V.Road,
Nelliaddy.

DCS
124/2, Palaly Road,
Thirunelvely.

(C/12639)



ஸ்ரீராம ஜெயம்

யாழ் நகரின் மையப்பகுதியில்
சகல வசதிகளுடன் கூடிய ஒரு கல்யாண மண்டபம்
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள்
கோவிலின் வீதியில் அமைந்துள்ள

# ஸ்ரீ லக்ஷ்மி நாராயண கல்யாண மண்டபம்

## திறப்பு விழா

இன்று 26.08.2000
காலை . 8. 00மணிக்கு



நண்பகல் 12.00 மணிக்கு மதியபோசனம். இந் நிகழ்வுகளில் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

பிரதம விருந்தினர்
திரு. வே.பொ. பாலசிங்கம்
ஆணையாளர், யாழ் மாநகர சபை

விளம்பர அன்பளிப்பு:

**சொனிகா கலர் லாப்**

14. ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

Design by NANTHA Graphics



தமிழ் மக்களின் நீண்ட கால இனப்பிரச்சினைக்கு தீர்வு காண நீதியான, நிரந்தரமான, நீடித்த அரசியல் தீர்வுக்காக போராடியும் வாதாடியும் வரும்

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு (ஈ.பி.டி.பி)**

**உங்கள் வாக்குகளை அளியுங்கள்**

X

(C/12701)


இப்பத்திரிகை நியூ. உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்26-08-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.